

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 19ம் நாள் (03-01-2026 சனிக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722



தில்லையில் தேரோட்டம் - மார்கழி 18 ஆம் நாள்

# சிதம்பரம் நடராசர் திருக்கோயில் பெருந்தேர்த் திருவிழா















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



# இலங்கை சைவத் தமிழர்களுக்கு தலைமை வேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

இலங்கை சைவத் தமிழர்களுக்கு தன்னிகரற்ற தலைமைகள் வேண்டும் என்று பல தடவைகள் நாம் வலியுறுத்தியுள்ளோம். இதனை ஒரு பாரிய இடைவெளியாகவே நாம் பார்க்கின்றோம். அரசிடமோ அல்லது வெளிநாட்டுத் தலைமைகளுடனோ பேசுவதற்கோ அல்லது எமது மதரீதியான தவறான நடவடிக்கைகளுக்கு குரல் கொடுப்பதற்கோ ஒருவரும் இல்லை என்பதனை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மற்ற மதங்களுக்கு உள்ள, மதக் கட்டமைப்பு மற்றும் மதத்தலைமை, இலங்கையில் எங்கள் சைவசமயத்திற்கு இல்லை என்பது கசப்பான உண்மை. பௌத்தர்களுக்கு வலிமையான பௌத்த பீடங்கள், ஏன் இலங்கை அரசாங்கமே துணையாக நிற்கிறது. இது அவர்கள் தத்தம் மதங்களில் கொண்ட பற்றினைப் பறைசாற்றி நிற்கிறது. அதுபோல் கிருத்துவ மதத்தில் ஆண்டகை, பங்குத்தந்தைகள், பல தேவாலயங்கள் அவைசார் பாதிரியார்கள் என்று முழுமையான மதக்கட்டமைப்பு இலங்கையில் இருக்கிறது. அதுபோல முகமதியர்களுக்கும் சிறந்த மதக்கட்டமைப்பு மட்டுமல்ல ஒவ்வொரு முகமதியருமே தங்கள் மதத்தின் கொள்கைகளில் தெளிவாகவும், ஆழமாகவும் உள்ளனர். ஆனால் இலங்கையில் உள்ள சைவர்களுக்கு குரல் கொடுக்க யார் உள்ளார்கள் என்ற கேள்வி என்னைப் பல்லாண்டு காலமாய் உருக்கி வருகிறது.

இந்தச் சிந்தனையை பொது வெளியில் பகிர்ந்த போது பலர் தம் கருத்துகளை பகிர்ந்தனர். அதில் எமக்குத் தலைவர் சிவபெருமானே மற்றும் தலைமை, தலைமைப்பீடங்கள் என்ற பதம் சபைகளுக்கும் மற்றும் திணிக்கப்பட்ட மதங்களுக்கு மட்டுமே பொருந்தும் என கருத்துப்பதிவினை செய்திருந்தனர். சிவபெருமானே எம் தலைவர் அதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. ஆனால் நாம் இங்கே கூறுவது பூவுலகில் குறிப்பாக இலங்கையில் ஒரு தலைமைப்பீடம், தலைமை வேண்டுமென்பதே.

இன்று இலங்கையில் எமது சமயத்திற்கு பல இடங்களில் சவால்கள், சறுக்கல்கள், கோயில் பிரச்சனைகள், நிர்வாகம் சார்ந்த சிக்கல்கள் என்று பல எழுந்துள்ளன. ஆனால் அதனை நியாயமான முறையில் அணுகித் தீர்ப்பதற்கு அல்லது அவற்றிற்காக குரல் கொடுப்பதற்கு எங்களுக்கு ஆதீனங்களோ அல்லது சைவத் தலைமைகளோ இல்லை. சில மடங்கள், சில சிவாச்சாரியார்கள் மற்றும் சில சைவ அமைப்புக்கள் முன்னின்றாலும் எங்கள் சமயத்தின் ஆணித்தரமாக உண்மையான குரலாக ஒலிக்க எமக்கு ஒரு தலைமை வேண்டும். இந்த வழியில் நல்லை ஆதீனம் மீளுருவாக்கம் செய்யப்படவேண்டும்.

ஆதீனம் என்பது தனிப்பட்டவர்களின் அல்லது ஒரு சில அமைப்புகளின் கடிவாளத்தில் இல்லாமல் சுயாதீனமாக இயங்கக்கூடிய, முக்கியமாக சைவத்தின் வழி நின்று, சைவம் வளர்க்கக்கூடிய ஒரு நிறுவனமாக உருவாக வேண்டும். நல்லை ஆதீனம் மீண்டும் அதன் பொலிவுடன் இயங்குநிலைக்கு வர எல்லாம் வல்ல தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானை வேண்டி விண்ணப்பம் வைக்கிறேன்.

குறிப்பு: இலங்கையில் சைவம் வளர்க்கும் அமைப்புகள், தனிநபர்கள், சிவாச்சாரியார்கள், கோயில்கள், அருட்சுனைஞர்கள், அடியார்கள் தனித்தனியாக உள்ளனர் மற்றும் இயங்குகின்றனர். இங்கு நான் குறிப்பிடுவது ஒரு தலைமை நிறுவனம் மற்றும் தலைமை.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

**இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தப் பேரிடர் காரணமாக, கடந்த 04-12-2025 அன்று வெளியாக வேண்டிய எங்கள் 'தென்னாடு' கார்த்திகைத் திங்கள் (64-ஆவது) இதழ் வெளியிடப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.**

(05-11-2025) – தென்னாட்டின் அறுபத்து மூன்றாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, துலை நல்லோரை, ஐப்பசித் திங்கள் 19 ஆம் நாள் நிறைமதி அன்று (05.11.2025 – புதன்கிழமை), ஐப்பசி நிறைமதி அன்னக்காப்பு வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றது. அன்றைய நாளில் திருக்–கயிலாயப் பரம்பரை தருமை ஆதீன திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த 27 ஆவது குருமணிகள் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் மணிவிழா சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி. சிவத்திரு. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் அவர்கள், சென்னை மாணிக்கவாசகர் மன்றத் தலைவர் அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள், தமிழ்நாடு கோயம்புத்தூரை சேர்ந்த பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ. சிவசண்முகம் ஐயா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிறுநீரகவியல் நிபுணரும், பேராசிரியருமான வைத்தியர் பாலசிங்கம் பாலகோபி அவர்கள், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மூத்த விரிவுரையாளருமான சைவப்புலவர் சி.கா. கமலநாதன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், தருமையாதீன குருமணிகளின் மணி விழாவை சிறப்பித்து சொற்பொழிவுகள் நடைபெற்று, தொடர்ந்து இதழ் வெளியீடும் இடம்பெற்றிருந்தது. வெளியீட்டில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், சென்னை மாணிக்கவாசகர் மன்றத் தலைவர் அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து மூன்றாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும், மருத்துவத் துறையில் பெரும் பங்களிப்பினை ஆற்றி, தமிழ்ப்பற்றுடன் சமூகப் பணிகளையும் முன்னெடுத்து வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிறுநீரகவியல் நிபுணரும், பேராசிரியருமான வைத்தியர் பாலசிங்கம் பாலகோபி அவர்களை சிறப்பித்து கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(06,07-11-2025) – வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு ஆனிலையப்பர் திருக்கோயின், திருக்குட நன்னீராட்டு பெருவிழா வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. இவ் வழிபாடுகளை அருட்குருநாதர் தவத்திரு.ந. ஒளியரசு ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார். (07-11-2025) – தென்னாட்டில் தீக்கை வழங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஒன்பது பேர் நுழைவு (சமயம்) தீக்கையும், இருவர் சிறப்புத் தீக்கையும் பெற்றிருந்தனர். மறைமலை அடிகளார் வழிவந்த அருட்குருநாதர் தவத்திரு. ஒளியகம். ந. ஒளியரசு ஐயா அவர்களினால் தீக்கை வழங்கி வைக்கப்பட்டது. மேலும் தீக்கை பெற்ற அடியார்களிற்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

(16-11-2025) – அமரர் சின்னத்துரை முத்துக்குமாரசுவாமி அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (17-11-2025) – கார்த்திகைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (16-11-2025) – அமரர் இரத்தினகாந்தி முத்துக்குமாரசுவாமி அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (28-11-2025) – கொக்குவில் இந்துக் கல்லூரி அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் மூன்றாம் ஆண்டு சங்கு நீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (04-12-2025) – கார்த்திகைத் திங்கள் தீபத் திருநாள் வழிபாடுகளும் நிறைமதி வழிபாடுகளும் சிறப்பாக இடம்பெற்றன. (10-12-2025) – ஆறுமுகநாவலர் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (16-12-2025) – மார்கழி அதிகாலை சிறப்புப் பூசை வழிபாடுகள் தொடங்கி வைக்கப்பட்டன.

(24-12-2025) – வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் புதிதாக அமையப்பெற்ற அருள்மிகு ஆனிலையப்பர் திருக்கோயின் சங்குநீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (25-12-2025) – திருவம்பாவை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டு பத்து நாட்கள் சிறப்பாக இடம்பெற்றன. (25-12-2025) – அமரர் சுப்பிரமணியம் சிவநாதன் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (29-12-2025) – சாவகச்சேரி அருள்மிகு ஆதி வாரிவனேசர் திருக்கோயின் ஆறாம் ஆண்டு சங்கு நீராட்டு வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (01-01-2026) – யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அருள்மிகு மங்களநாதர் திருக்கோயிலில் 'திருவாசக முற்றோதல்' இடம்பெற்றது. (01-01-2026) – மார்கழித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# மட்டக்களப்பு பலாச்சோலையில் பத்திப் பெருக்குடன் அரங்கேறிய மார்கழிப் பெருவிழா







யாழ்ப்பாண மண்ணில் தென்னாடு சைவ மாணவர் சபையினால் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகவும் மிக விமரிசையாகவும் முன்னெடுக்கப்பட்டு வந்த மார்கழிப் பெருவிழாவானது, இம்முறை இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தப் பேரிடர்கள் காரணமாக அங்கு திட்டமிட்டபடி நடைபெற முடியாமல் போனது. எத்தகைய சூழலிலும் இந்தத் தெய்வீகத் தொண்டு தடைப்பட்டு விடக்கூடாது என்ற உயரிய நோக்கில், மட்டக்களப்பு பலாச்சோலை அறநெறி அமைப்பினர் இவ்விழாவினை மிகக் குறுகிய கால அவகாசத்தில் பொறுப்பேற்று மிகச் சிறப்பான முறையில் நடாத்தி முடித்துள்ளனர். இறைவனுக்கான விசேட பூசைகளுடன் பத்தி மணம் கமழத் தொடங்கிய இவ்விழாவில், சுமார் 200 பேர் வரை எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என 166 பேர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

சைவ நெறியின் பெருமையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நோக்கில் அமைந்த இந்த விழாவில், 23 மாணவர்கள் நாயன்மார் கோலம் பூண்டு பத்திப் பரவசத்தை ஏற்படுத்தியதுடன், ஏனைய கலை நிகழ்வுகளில் 42 மாணவர்கள் என மொத்தம் 65 மாணவர்கள் தமது கலைத்திறமைகளை வெளிப்படுத்தினர். மாணவர்களின் எழுச்சிமிக்க நிகழ்வுகளும், பெரியோர்களின் ஆக்கபூர்வமான உரைகளும் விழாவிற்கு வருகை தந்திருந்தோரை வெகுவாகக் கவர்ந்ததுடன், அனைவரது பாராட்டுகளையும் பெற்றது. இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த கோயில் தலைமைப் பூசகர்கள், அடுத்த வருடம் இந்த மார்கழிப் பெருவிழாவைத் தாங்களே முன்னின்று நடாத்துவதாகவும், அதற்கான முழுமையான செலவுப் பொறுப்புக்களைத் தாங்களே ஏற்றுக்கொள்வதாகவும் உறுதியளித்தது இவ்விழாவிற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மதிய நேர அன்னதானத்துடன் இனிதே நிறைவுற்ற இந்த மார்கழிப் பெருவிழாவானது, பேரிடர் காலத்திலும் சைவத் தமிழையும் அறநெறி உணர்வையும் பலாச்சோலை மண்ணில் ஆழமாக விதைத்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**

# சைவ பண்டிதர் பரீட்சை முடிவுகள் வெளியீடு

சைவத் தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையினால் 2025 இல் நடாத்தப்பட்ட சைவ பண்டிதர் மற்றும் இளஞ்சைவ பண்டிதர் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. தமிழ், சைவசித்தாந்தம், திருமுறை, வரலாறு, சைவப்பண்பாடு ஆகிய ஐந்து பாடங்களில் நடைபெற்ற இப்பரீட்சையில் சைவ பண்டிதர் பிரிவில் இருவரும் இளஞ்சைவ பண்டிதர் பிரிவில் முப்பது பேரும் சித்தியடைந்துள்ளனர். சைவ பண்டிதர் பிரிவில் சித்திபெற்றோர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அனைவருக்கும் பட்டமளிப்பு விழா விரைவில் நடைபெறும் என பொதுச் செயலாளர் செ.சாந்தரூபன் தெரிவித்துள்ளார்.

**சித்தி பெற்றோர் விபரம்:**

**சைவ பண்டிதர்:**

1.த.ஷர்மிதன் (மட்டக்களப்பு), 2.கு.விஷ்ணுராசா (கொழும்பு).

**இளஞ்சைவ பண்டிதர்:**

1.ச.சாந்தினி (புத்தளம்), 2.பா.மதிவதனி (மட்டக்களப்பு), 3.மி.பாலச்சந்திரன் (மட்டக்களப்பு), 4.சி.கமலேஸ்வரன் (இலண்டன்), 5.வ.கலைச்செழியன் (திருகோணமலை), 6.கே.லக்சுமன் (கல்முனை), 7.த.ஷதுர்சனா (மட்டக்களப்பு), 8.மு.நிலாயினி (மட்டக்களப்பு), 9.ல.அருச்சுனன் (பதுளை), 10.அ.வேலாயுதம் (திருகோணமலை), 11.ப.திருச்செல்வி (பதுளை), 12.பா.மதியழகன் (நுவரெலியா), 13.இ.நித்தியவதனி (கிளிநொச்சி), 14.சி.சியாமசங்கவி (கல்முனை), 15.சி.பி.ரிஷாந்தன் (தலைமன்னார்), 16.ச.சுரேந்திரன் (திருகோணமலை), 17.க.சபாலிங்கம் (திருகோணமலை), 18.நா.மனோரஞ்சித்குமார் (நுவரெலியா), 19.தி.சந்தோசா (அக்கரைப்பற்று), 20.கு.கிலசன் (கல்முனை), 21.ப.தெய்வநாயகம் (கல்முனை), 22.வி.சிவலோகநாயகி (கல்முனை), 23.சி.ஸ்ரீ கௌரி (திருகோணமலை), 24.வி.ரோசாந்தினி (வவுனியா), 25.செ.வதனி (மட்டக்களப்பு), 26.ப.கிரிஜா (மட்டக்களப்பு), 27.பி.மிதுஷா (மட்டக்களப்பு), 28.ப.லெச்சுமி (கண்டி), 29.வி.லிங்கேஸ்வரன் (கண்டி), 30.வி.கிருபைராஜா (கல்முனை).

முடிவுகளை www.saivatm.org இணையத்தளத்தில் காணலாம்.

**திருச்சிற்றம்பலம்**

# சிவனடி சேர்ந்தார் சைவத்தமிழ் வளர்த்த 'பணித்திருந்தகை' சிவத்திரு. அப்பாதுரை பஞ்சலிங்கம் அவர்கள்

யாழ்ப்பாணத்து மண் ஈன்றெடுத்த தலைசிறந்த கல்வியியலாளரும், சைவத் தமிழின் உறுதிமிக்க காவலருமான சிவத்திரு. அப்பாதுரை பஞ்சலிங்கம் (வயது 89) அவர்கள் சிவனடி சேர்ந்த செய்தி அடியார் பெருமக்களையும் கல்விப்புலத்தையும் ஆழ்ந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. கொக்குவில் கிழக்கில் பிறந்து, கொக்குவில் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளில் கல்வி பயின்ற இவர், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் இளமாணிப் பட்டத்தையும், புதுடில்லியில் கல்வி நிர்வாகம் சார்ந்த பட்டப்பின் டிப்ளோமாவையும் பெற்றார். 1982 இல் கல்வி நிர்வாக சேவையில் இணைந்து, தான் கல்வி பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய இரு பெரும் சைவக் கல்லூரிகளின் அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

ஓய்வுபெற்ற பின்னரும், பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், "கிட்ஸ் பார்க்" நிறுவனத்தின் மூலம் சிறுவர்களுக்கு அறநெறி சார்ந்த ஆரம்பக் கல்வியை வழங்குவதிலும் முனைப்புடன் செயற்பட்டார். இவரது தன்னலமற்ற சைவ மற்றும் கல்வித் தொண்டினைப் பாராட்டி, 2023ஆம் ஆண்டு **"பணித்திருந்தகை"** எனும் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார். அவரது கல்விப்பணிக்கு இணையாக, சைவ நெறியைப் பாதுகாப்பதிலும் நிலைநாட்டத்திலும் அவர் காட்டிய முனைப்பு போற்றத்தக்கது. இவர் தனது இறுதிக் காலத்திலும் சைவத்தை நிலைநாட்டும் முயற்சியின் முனைப்பாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், ஆகம விதிகளை மீறி சிவலிங்கத்தை தூக்கப்பட்ட போது, அதனை வன்மையாகக் கண்டித்து குறித்த தரப்பினரால் ஆளுநரிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போது, அவர்களோடு இணைந்து அதனை வன்மையாகக் கண்டித்ததோடு மட்டுமல்லாமல், ஆளுநருக்கு வழங்கப்பட்ட கண்டனக் கடிதத்தில் முன்னின்று கையொப்பமிட்டுத் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்.



இவ்வாறு கல்விப்பணிகளையும் சிவப்பணிகளையும் சிறப்புற ஆற்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்துள்ள, நீத்தார் அப்பாதுரை பஞ்சலிங்கம் அவர்களின் உயிர் உயர்வடைய வேண்டி எல்லாம்வல்ல எங்கள் ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

# செம்மணி வளைவுப் பகுதியில் அசைவ உணவகங்களுக்குத் தடை!



யாழ்ப்பாணத்தின் நுழைவு வாயிலாகவும் சைவப் பண்பாட்டின் அடையாளமாகவும் திகழும் செம்மணி மற்றும் நல்லூரான் வளைவுப் பகுதிகளில், சமய கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நல்லூர் பிரதேச சபை வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் தலைமையில் நடைபெற்ற அமர்வில், இப்பகுதிகளில் அசைவ உணவகங்கள் மற்றும் தங்குமிட விடுதிகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என உத்தியோகபூர்வமாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் எவரும் முதலில் வணங்குவது செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள நல்லூரான் வளைவையும் அங்குள்ள சிவலிங்கத்தையுமே ஆகும். எனவே, சிவலிங்கம் மற்றும் அதனைச் சூழவுள்ள கோயில் நிலங்களின் புனிதத்தைப் பேணுவதும், ஒரு தூய ஆன்மீகச் சூழலை உருவாக்குவதும் அவசியமெனச் சபையினால் வலியுறுத்தப்பட்டது.

இதற்கமைய, அசைவ உணவகங்கள், விருந்தினர் விடுதிகள் மற்றும் அந்தச் சூழலுக்குப் பொருத்தமற்ற வணிக நிலையங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எமது மண்ணின் தனித்துவமான அடையாளத்தை வருங்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்கும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ள இந்த அதிரடி நடவடிக்கை, சைவப் பற்றாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

திருச்சிற்றம்பலம்

# சைவத்தமிழ் வளர்க்கும் 'ஞானத்திரள்' குழுவினருக்குச் சிறப்புப் பாராட்டு சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அருளாசி




சென்னை வில்லிவாக்கம் அருள்மிகு கமல விநாயகர் சத்சங்கம், தனது ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஆன்மீகப் பயணத்தில் திருமுறை மற்றும் சைவ சித்தாந்தப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக, சித்தாந்த கலாநிதி செந்தமிழரசு கி.சிவகுமார் அவர்கள் நிகழ்த்திய பாம்பன் சுவாமிகளின் 'தகராலய ரகசியம்' குறித்த 35 நாட்கள் தொடர் சொற்பொழிவின் மீள்பார்வை நிகழ்வு இன்று நடைபெற்றது. இந்நிகழ்வில், ஆசிரியர் சிவகுமார் அவர்களின் சொற்பொழிவுகள் 'விரலி' (USB) வடிவில் ஆவணப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டன.

தொடர்ந்து நடைபெற்ற பாராட்டு விழாவில், சைவத் தமிழுக்குப் பெரும் பணியாற்றி வரும் 'ஞானத்திரள்' இதழின் பதிப்பாசிரியர் அருணாச்சலம் மற்றும் ரேணுகா ரமேஷ் ஆகியோரின் தன்னலமற்ற பணிகளைப் பாராட்டிச் சிறப்பு செய்யப்பட்டது. செங்கோல் ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்கள் நேரில் கலந்துகொண்டு, இவர்களது பணிகளைப் பாராட்டி அருளாசி வழங்கினார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொய்வின்றிச் சைவத் தொண்டாற்றி வரும் கமல விநாயகர் சத்சங்கம், இத்தகைய முயற்சிகள் மூலம் சைவ நெறியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதில் முன்னோடியாகத் திகழ்கின்றமை குறிப்பிடத் தக்கது.

**திருச்சிற்றம்பலம்**

# மக்கள் துயர்நீங்கி விரைவில் இயல்புநிலை திரும்ப வேண்டி தருமை ஆதீனம் வழிபாடு

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த கடும் புயல் மற்றும் பெருமழை காரணமாக மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், அவர்கள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டி இந்தியா தருமை ஆதீனம் 27 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் உருக்கமான செய்தி ஒன்றினை விடுத்துள்ளார். பேரிடர் நிகழ்ந்து சில நாட்களிலேயே விடுக்கப்பட்டுள்ள இச்செய்தியில் அவர் தெரிவித்திருப்பதாவது.

"இயற்கையின் சீற்றத்தால் இலங்கை மக்கள் தமது உறவுகளையும் உடைமைகளையும் இழந்து சொல்லொணாத் துயரில் ஆழ்ந்துள்ளனர். பலர் உயிர்ப்பலி ஆனதும், காணாமல் போனதும் மனவேதனையை அளிக்கின்றது. பாதிக்கப்பட்ட எம் சேய்நாட்டு மக்களுக்கு ஆறுதலைத் தெரிவிப்பதோடு, மறைந்த அனைவரது இன்னுயிர் ஈடேற்றத்திற்காகவும் இறைவனிடத்தில் விண்ணப்பம் வைக்கின்றோம். இக்கட்டான சூழலில் இலங்கை மக்களுக்கு உடனடியாக உதவிக்கரம் நீட்டிய இந்திய அரசிற்கு எமது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்திலும் மழையினால் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன, அவற்றுக்கான நிவாரணங்களை அரசு விரைந்து வழங்க வேண்டும். உலகிலுள்ள அனைத்து உயிர்களையும் பேரிடர்களில் இருந்து காத்தருள இறைவனை வேண்டி நிற்கின்றோம்" என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருச்சிற்றம்பலம்**



# உலக சாதனையானது திருவாரூரில் 1500 அடியார்கள் கூடிப் பாடிய திருமுறை இசைப் பெருவேள்வி



ஆன்மீகம் ஆனந்தம் அமைப்பு மற்றும் திருவையாறு ஐயாறப்பர் திருமுறை மன்றம் இணைந்து நடத்திய **"திருமுறை இசைப் பெருவேள்வி விழா"** கடந்த 30-12-2025 அன்று திருவாரூர் அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயிலில் மிக விமரிசையாக நடைபெற்றது. பன்னிரு திருமுறைகளின் பெருமையை உலகறியச் செய்யும் நோக்கில் நடத்தப்பட்ட இந்நிகழ்வு, **"டிவைன் வேர்ல்ட் புக் ஆப் ரெக்கார்ட்ஸ்"** உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துப் புதிய வரலாற்றைப் படைத்துள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக, திருவையாறு ஐயாறப்பர் திருமுறை மன்றத்தின் ஆசிரியர் கோ.ப. நல்லசிவம் அவர்களிடம் தேவாரம் பயிற்சி பெற்ற 10 மையங்களைச் சேர்ந்த 1000 த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஒரே இடத்தில் கூடித் திருமுறைகளை இசைத்தனர். இவர்களோடு 500 க்கும் மேற்பட்ட அடியார்கள் இணைந்து கொள்ள, மொத்தம் 1500 க்கும் மேற்பட்டோர் ஏக காலத்தில் திருமுறைப் பாடல்களைப் பாடி திருவாரூர் மண்ணைப் பக்தி மழையில் நனையச் செய்ததுடன், இது ஒரு மாபெரும் உலக சாதனை நிகழ்வாகவும் பதியப்பட்டுள்ளது.

மணிவிழா கண்ட நாயகன், தருமபுரம் ஆதீனம் 27ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு, மாணவர்களின் திருமுறைப் பற்றைப் பாராட்டி ஆசியுரை வழங்கினார்கள். உடன், திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டு ஆசி வழங்கினர். ஆன்மீகம் ஆனந்தம் அமைப்பின் நிறுவனத் தலைவர் ஜெ.கனகராஜன் வரவேற்புரை ஆற்றினார். தியாகராசசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் பி.எஸ்.கவியரசு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் வே.குமரசேன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்ச் சங்கத் தலைவர் புலவர் இரா.சண்முக வடிவேல், ஸ்ரீ நாராயணி நிதி நிர்வாக இயக்குநர் S.கார்த்திகேயன், அரன்பணி அறக்கட்டளைத் தலைவர் பவானி அ. தியாகராசன் மற்றும் வேலுடையார் கல்விக்குழுமத் தாளாளர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமுறை ஆசிரியர் கோ.ப.நல்லசிவம் ஐயா அவர்களை சிறப்பான நெறியாள்கையில் நடைபெற்ற இந்நிகழ்வு, மங்கல இசை மற்றும் நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது.

**திருச்சிற்றம்பலம்**







## தென்னாட்டில் பெரியபுராண முற்றோதல் நிறைவும் திருமூலர் குருபூசையும் (04-11-2025)









## தென்னாட்டில் தீக்கை வழங்கல் நிகழ்வு (07-11-2025)








சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




## நாடு மீளட்டும்!

தொடர்ச்சியாகப் பெய்த கனமழை காரணமாக வடக்கு, கிழக்கு, உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடியது! குடும்பங்கள் வீடுகளை இழந்தும், பயிர்கள் சேதமடைந்தும், கிராமங்கள் முழுவதும் மண்சரிவால் நிலத்துள் அமிழ்ந்தும் இடரில் சிக்கின! இது சாதாரண மழைக்கால அனுபவம் அல்ல! ஆயிரக்கணக்கான மக்களின் கடுமையான பேரிடர் நிலையாக இருந்தது! இந்தத் தருணம் நாம் மனிதர்களாக எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை சைவசமயம் வலியுறுத்துகின்றது!

சைவம் மனிதனின் உயர்ந்த பண்பு “அறம்” என்று கூறுகிறது. அறம் என்பது பிறர் துன்பத்தில் கைகொடுக்கும் உயர் பண்பு. “மக்கள் சேவையே மகேசன் சேவை” என்பது ஆன்றோர் வாக்கு! இன்றைய வெள்ளப் பாதிப்பு அந்தத் தத்துவத்தை நம் செயல்பாடுகளில் உயிரோட்டத்துடன் வெளிப்படுத்த வேண்டிய நேரமாக உள்ளது.

மத்திய மலைநாட்டில் பல வீடுகள் நீரில் மூழ்கி, பள்ளிக்கூடங்கள் தற்காலிக முகாம்களாக மாறி, உடைமையைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலையில் பெண்கள், குழந்தைகள், முதியோர் எனப் பலரும் தளர்ச்சியில் உள்ளனர். சைவ நாயன்மார்களின் வரலாற்றில் காணப்படும் தியாக மனப்பான்மையும் பிறர்க்கு உதவும் பண்பும் இன்று நமக்கு வழிகாட்டி மனிதநேய செயலாக்கமாக மாற வேண்டும். சேவை என்பது பொருளை வழங்குவது மட்டுமல்ல அது சக மனிதனின் மனதில் நம்பிக்கையை நிறுத்தும் பணி.

இன்றைய உலகம் இயற்கையோடு உடனிருந்த ஒற்றுமையை இழந்திருக்கிறது. பசுமையைக் களைந்து கட்டிடங்கள் எழுந்து, ஆற்றுப் பாதைகள் மறுக்கப்பட்டு, மண்நிலம் கடுமையாகப் பயன்படுத்தப்பட்டதால் இயற்கை சமநிலை சிதைந்தது. சைவ மரபில் “யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை” என்ற ஆழ்ந்த கோட்பாடு உள்ளது. மனிதன், விலங்கு, மரம், மலை அனைத்தும் ஒரே பரம்பொருளின் படைப்பு. நாம்செய்யும் ஒவ்வொரு சுற்றுச்சூழல் பிழையும், காற்றிலிருந்து கடல் வரை எங்கோ ஒரு பெரும் கலக்கத்தை உருவாக்கி இறுதியில் மனித வாழ்க்கையைத் தாக்கும். இன்று நிகழும் வெள்ளப் பாதிப்பும் அத்தகைய இயற்கை எச்சரிக்கையின் விளைவே என நாம் உணர வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இந்தப் பேரிடர் நிலை நமக்கு இரண்டு பொறுப்புகளை முன்வைக்கிறது. ஒன்று உடனடி மனித நேய உதவி. உணவு, உடை, குடிநீர், மருந்து, தங்குமிடம், இவை மிக அவசியமானவை. கோயில்கள், சமூக அமைப்புகள், இளைஞர் மன்றங்கள், உள்நாட்டு அமைப்புகள் அனைத்தும் இணைந்து ஒரு ஒருங்கிணைந்த சேவைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். நம்மிடம் உள்ள சிறிய அளவு கூட மற்றொருவரின் உயிர் பாதுகாப்புக்கு மதிப்பான ஆதரவாக மாறக்கூடும்.

மற்றையது நீண்டகால சுற்றுச்சூழல் விழிப்புணர்வு. பேரிடர் ஒரு நாள் குறையும். ஆனால் அதன் வேராக இருக்கும் சுற்றுச்சூழல் சீர்குலைவைக் கவனிக்காவிட்டால் இதே நிலை மீண்டும், அதைவிட மோசமாக, நிகழும். மரநடுகை, நீர்நிலை பாதுகாப்பு, கழிவு மேலாண்மை, பசுமை பகுதிகளை மீட்டெடுப்பு, கடற்கரை பாதுகாப்பு போன்ற முயற்சிகள் சமய அமைப்புகள் மூலம் மக்களிடம் ஊக்குவிக்கப்பட வேண்டும். சைவ சமயம் சுத்தம், நேர்மை, சூழல் நேயம் ஆகியவற்றை ஒருங்கே போதிப்பதால் சுற்றுச்சூழல் பராமரிப்பும் சைவத்தின் ஒரு பங்கு.

பேரிடர் காலத்தில் மனித மனம் பலமுறை கலங்கினாலும், “கருணையையே கடவுளெனக் காண்பது” என்ற சைவ சித்தாந்த வாக்கு நமக்கு உறுதியைத் தருகிறது. நாம் இயற்கையை பாதுகாத்தால், அது தனிப்பட்ட நன்மை அல்ல மாறாக ஒரு சமுதாயத்தின் எதிர்காலத்தைக் காக்கும் பணியாகும். இந்நேரத்தில் நம் பக்தியும் ஆன்மீக மனப்பான்மையும் செயல்முறையாய் வெளிப்பட வேண்டும். இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கண்ணீரைத் துடைப்பது ஒரு மனிதாபிமானப் பணியாகும்.

வெள்ளநீர் குறையும் வாழ்க்கை மீள ஆரம்பிக்கும். ஆனால் இந்த அனுபவம் நமது செயல்களையும் சமூக விழிப்புணர்வையும் மாற்ற வேண்டும். நாம் கட்டும் ஒவ்வொரு வீடு, நாம் வெட்டும் ஒவ்வொரு மரம், நாம் மாற்றும் ஒவ்வொரு நிலப்பரப்பு இவை அனைத்தும் மனித சமுதாயத்திற்கும் இயற்கைக்கும் இடையிலான சமநிலையை பாதிக்கக்கூடியவை என்பதை உணர்வோம்.

இறைவன் அருளால் எல்லா குடும்பங்களும் விரைவில் பாதுகாப்பாக மீண்டு வர பிரார்த்திப்போம்! இந்த பேரிடரின் இருளில் நமது உறவுகள் மீள அன்பின் விளக்கே ஒளி புரியட்டும்!

திருச்சிற்றம்பலம்

# சொற்சிலம்பம்-9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | | | ■ | 03 |
| | ■ | 04 | | | ■ | 05 | |
| | ■ | | ■ | ■ | 06 | ■ | |
| | ■ | | 07 | | | | |
| 08 | | | | ■ | | ■ | |
| 09 | | | | 10 | | ■ | |
| | ■ | | ■ | 11 | | | ■ |
| ■ | ■ | ■ | 12 | | | | |

### இடமிருந்து வலம்

*01. மார்கழியில் பிரதானமாகும் திருமுறை*
*04. மனதை ஒரு நிலைப்படுத்துவது*
*05. மரம்*
*07. ஆன்மா ஒருமிக்கும் இடம்*
*08. குடமுழுக்கின் பின் முதன்முதலில் விக்கிரகத்துக்கு முன் வைக்கும் பொருள் (குழம்பி)*
*09. உத்தரகோசமங்கையில் நடராசர் திருமேனி அமைந்துள்ள மூலகம்*
*11. குணத்தை இப்படியும் கூறலாம்*
*12. குற்றத்திற்கான தண்டனை ஒன்று*

### மேலிருந்து கீழ்

*01. நினைத்தால் முத்தி தரும் தலம்*
*02. மாணிக்கவாசகர் திருநாமம்*
*03. சிவனுக்குரிய விரதம்*
*04. "துணிவளர் திங்கள்" எனும் பாடலால் நீங்கிய நோய்*
*10. நாட்டிய உருப்படி (தலைகீழ்)*

**பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், கல்விகற்கும் தரம் மற்றும் பிரிவு, தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல்பக்க பிரதியையும் இணைத்து அனுப்பி வைக்கவும். மேற்குறிப்பிட்ட தகவல்கள் பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசிலும் அனுப்புதல் தபால் செலவும் வழங்கப்படும். அனுப்பும் போது கடிதஉறையின் மேல்மூலையில் 'சொற்சிலம்பம்' என்று குறிப்பிட்டு அனுப்பவும்.**

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**
**தைத் திங்கள் 11 ஆம் நாள் (25-01-2026)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# சொற்சிலம்பம்-8

**(கடந்த திங்கள் சொற்சிலம்பத்திற்கான விடைகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 மா | ர் | 02 க | ழி | பெ | ரு | வி | ழா |
| ணி | ■ | ந் | ■ | 03 ப | சு | ப | தி |
| க் | ■ | 04 த் | மி | ழ | 05 க | ம் | ■ |
| க | ■ | பு | ■ | 06 வி | மு | து | ■ |
| வா | ■ | 07 ரா | ம | னை | 08 ம | ல | ர் |
| 09 ச | ம | ண | ம் | ■ | ல | ■ | ■ |
| 10 க | த | ம் | ப | ம் | ம் | ■ | 11 ப |
| ர் | ■ | 12 சு | வ | ம் | ■ | ■ | த |

### இடமிருந்து வலம்

*01. மார்கழியில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் சைவ எழுச்சி விழா*
*03. ஆன்மாக்களின் தலைவன்*
*04. பத்திநெறி தழைத்தோங்கிய நிலப்பரப்பு*
*06. கிளையைத் தங்குவது*
*07. இலக்குவன் பின்தொடர்ந்தது*
*08. இறைவனை அர்ச்சனை செய்ய உகந்தது.*
*09. திருஞானசம்பந்தர் எதிர்த்து வென்ற சமயம்*
*10. தெய்வ அலங்காரத்திற்காக பலவகை மலர் கொண்டு தொடுக்கப்படுவது*
*12. அன்பின் உயர் வடிவம்*

### மேலிருந்து கீழ்

*01. திருப்பெருந்துறை கோயிலை அமைத்தவர்*
*02. நெற்றிக்கண்ணை குறிக்கும் புராணம்*
*03. ஊழ்வினையை இப்படியும் சொல்லலாம்*
*05. சீர்காழித் திருத்தலம்*
*11. மும்மலங்களால் ஆட்கொள்ளப்பட்டது.*

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**“வேகம் கெடுத்து ஆண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க,
புறத்தாற்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க”**

நமச்சிவாய வாழ்க எனத் தொடங்கி, ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க என்பது வரை ஆறு வாழ்க சொல்லி வாழ்த்திய மணிவாசகர் அடுத்து ஐந்து முறை வெல்க என்று பாடுகிறார்.

**“வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க”** என்பது முதல் உள்ள வெல்க எனத் திருவடி வெற்றி கூறும் பகுதி ஐந் தும் பஞ்சமல நிவிருத்தியை அறிவிப்பன என்பார் ச. தண்ட பாணி தேசிகர். வேகம் கெடுத்தலும், பிறவி அறுத்தலும், புறத்தோரால் அணுக இயலாமையும், வணங்குபவர்களை வாழ வைத்தலும் வென்றோனுடைய கொற்றம் ஆதலின் வெல்க என வாழ்த்தியவாறு.

**வேகம்:-** அறியாமையால் மாயையில் கட்டுண்டு ஒன்றி னும் நிலை பெறாது ஓடிக்கொண்டே இருக்கின்ற மன வேகம். உண்மையான பசுபோதத்தைத் திருநோக்கால் தீட்சித்தலே வேகம் கெடுத்தல் என்பது பழைய உரை. வேகம் என்பது **“யான் எனது”** என்னும் முனைப்பினை என்பார் அருணையார்.

**ஆண்ட வேந்தன்:-** ஞானத்தலைவன் சேற்றில் வீழ்ந்த மணியை நீரால் கழுவி எடுப்பார் போல, மலச்சேற்றுள் அழுந்திய என்னை திருநோக்கால் எடுத்து, அருள் நீரால் கழுவிப் பசு ஞானத்தை பதி ஞானமாக்கி, அடிமையாக ஏற்று ஆட் கொண்ட அரசன் என்பது.

**அடிவெல்க:-** வேந்தன் அடியானது எனது உள்ளத்திலுள்ள அகப்பகைகளாகிய காமமாதிகளை வென்று அகற்றிச் சிவபோகத்தை விளைவிக்க என்பது. இது பொறிகளின் வாயிலாக புலன்களில் சென்று பற்றி, ஒன்றிலும் நிலையாது ஆசை வயப்பட்டு, ஆகாமிய வினை களைத் தேடிக் கொள்கிற மனத்தின் விரைவைத் தடுத்துக் கட்டுப்பாட்டில் இருத்தி ஆட் கொண்ட மன்னவன் சிவன். அவன் திருவடி என்தடையை நீக்கி இன்பம் விளைப்பதாகுக என்பதாம்.



பேராசிரியர் சித்தாந்த
சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.

**பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்:-** பிறப்பு, ஆற்றின் நீரோட்டம் போல, அநாதி யாய், வினை வயத்தால் இடையீடின்றி விளைவதாய் கறங்கும் சகடமும் போலச் சுழற்சியும், மேலும் கீழுமாக மாறித் தோன்றலும் உடையது. பிறப்பை அறுத்தலாவது இன்று வரை அருளிய தேகப்பற்று நீங்கித் திருவடி ஞானத்தையே தேகமாக அருளுகை.

**பிஞ்ஞகன்:-** தலைக்கோலம் உடைவன். சிவபிரானது தலைக்கோலம், மணிமுடியும், நறுமலர்கண்ணியும் முத லாய பிறர் தலைக் கோலங்கள் போலாது, சடைமுடியும், பிறைக்கண்ணியும், கங்கையும், பாம்பும், முதலியனவாக வேறுபட்டு நிற்றலின் இப்பெயர் அவனுக்கு உரியதாயிற்று.

**பெய்கழல்:-** செறிக்கப்பட்ட வீரக்கழல். பிறப்பு அறுத்தலும் வீரக்கழல் சூடுதலும், வெற்றியும், வெற்றிச் சின்னமும் ஆதலால் எல்லா அடியாரிடத்தும் இவ்வெற்றி நின்று நிலவுவனவாக என விண்ணப்பித்தவாறு.

**புறத்தார்க்கு சேயோன்:-** புறத்தார் - சிவபிரானது திருவருட் குப் புறம்பானவர், அதாவது, அவனது பெருமையை உணர மாட்டாது ஏனைத் தேவர் பலருள்ளும் ஒருவனாக நினைப்ப வர் என்பதாம். அன்பில்லாதவர்கட்கு எட்டாதவன் எனலும் ஆம்.

**சேயோன்:-** வெறுப்பு உணர்ச்சியால் விலகிப் போவதன்று. அன்பு வடிவாய்த் திகழும் அடியார் பால் மணியின் கண் சோதி போல வெளிப்பட்டுத் தோன்றுகையும், அன்பிலராய் அருளுக்குப் புறம்பானவரிடத்தில் விறகில் தீயும், பாலில் படு நெய்யும் போல மறைய நிற்றலுமாகிய அவ்வளவே.

**பூங்கழல்கள்:-** பூப்போலும் மெல்லிய கழல்கள், பொலிவு பெற்ற கழல்கள் எனினும் ஆம். கழல் ஈண்டு ஆகுப்பெய ராய்த் திருவடியை உணர்த்திற்று எனலுமாம்.

**கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க:-** கைகூப்பி வணங்கும் அன்பர்கள், குவிப்பார் என்னாது, குவிவார் என்று அருளினமையால், தம் குறிப்பின்றி அவைதாமே குவியப் பெறுவார் என அவரின் அன்பு மிகுதியை உணர்த்திற்று. அன்பர்கள் கரம் குவித்து வழிபடுவதால் மகிழ்ந்த சிவ

பெருமான், அவர்களை மனம் மகிழ வைக்கின்றார். கரம் குவிவார் உள்ளத்தை இல்லமாகக் கொண்டு மகிழும் கோன் என இறைவற்கே அடையாக்கலும் ஆம். குருமணியாகிய ஆண்டவனைக் கண்ட பொழுது உள்ளிடம், வெளியிடம் என்று பாராது விழுந்து வணங்கி, வீடும் வேண்டா விறலின ராய்க் கூடும் அன்பினில் கும்பிடுவார் உள்ளத்தில் சிவா னந்தம் தோன்றுதலின் இவ்வாறு கூறினார்.

**சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க:-** சிரம்குவிவார் - சிரத்தின் மேல் கைகூப்புவார். குவிதல் என்பது சிதறிச் சென்று பற்றாது ஒன்றின் கண்ணே தாழ்தல், சிரத்தையும் சிவனடிக்கண் தாழ்த்துவர் என்பது பொருள். தாழ்ந்தோரை உயர்த்தி அறக்கருணை செய்தல் சிவபெரு மானின் இயல்பு. ஓங்குவித்தல் என்பது ஏனையோர் பல ரினும் உயர்ந்து விளங்கச் செய்தல்.

வெல்க என்ற இவ்வைந்து சொற்றொடர்களையும் குறித்துக் கூறியது என்றும் கூறுவர்.

**"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி
சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பொருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி"**

**ஈசன்:-** தலைவன்- ஆள்பவன். அவனுக்கு வணக்கம். எம் தந்தையாகிய அவனுடைய திருவடிக்கு வணக்கம்.

எல்லாவற்றையும், தமது உடைமையாகக் கொண்டு ஆள்பவன், ஆதலால் அவனே முதல்வன். அவனே வணங்கத் தக்கவன் என்பதை நமக்குக் காட்டுவது ஈசனடி போற்றி என்பது. ஈசனாக இருந்து நலம், தீங்கு கண்டு ஒறுத்தலும், உதவுதலும் செய்தல் போல, எம் தந்தையாகவும் இருந்து எம்மை உயர்த்துதலிலேயே கருத்தாக இருப்பவன். ஆத லால் யாம் செய்யும் துரிசுகளைப் பொறுத்து ஆளுபவன் என்னும் குறிப்பும் உணர்த்துவது.

அன்றியும், ஈசன் என்றது ஆண்டான் அடிமை திறத்தை யும், எந்தை என்றது மகன் தந்தை முறைத் திறத்தையும் உணர்த்துகின்றன எனலாம்.

**தேசனடி போற்றி:-** தேசன் - ஒளிமயமானவன் (ஞான ஒளி), (அருள் ஒளி) அருட்பெருஞ்சோதி எனவும் வழங்குவர்.

**சிவம்:-** நன்மை, மங்கலம், சாந்தம், இன்பம், எனப்பல பொருள் படுதலின் சிவம் என்பது அத்தனை குணங்களையும், ஒரு சேர உடையவன் எனப் பொருள்படும். அவனைப் பற்றிய பேருக்கும் அத்தனை நலன்களும் விழையும் என்க.

**சேவடி:-** செம்மைஅடி. அத்தகைய அருளுடைய சிவன் அடியே விகாரமற்ற செம்மை நிலையைப் பக்குவ ஆன்மாக் களுக்கு அளித்தருளும், ஆதலின் சேவடி என்று அருளப் பெற்றது.

**நேயம்:-** நேசம் (சகரத்திற்கு யகரம் போலியாக வந்தது.) நேசம்-அன்பு. அன்பே இறைவனுக்கு இருப்பிடம் ஆதலின் நேசத்தே நின்ற நிமலன் என்றான்.

**நின்று:-** நிலைபெற்ற. நிமலன்: - இயல்பாகவே மலங்கள் பற்றாதவன்.

பிறப்பு மாய அறுக்கும் மன்னன் எனக்கூட்டி மீட்டும் பிறவி உண்டாகாது அழிய அறுக்கும் மன்னன் எனப் பொருள் கொள்க. பிறவி அடியோடு களைதற்கு அரிது என்பதை உணர்த்த அறுக்கும் என்றார். அறுத்த புல் முளைத்தது போல அறுத்ததொன்று மீளவும் முளைக்கும் கூடுமாதலின் அங்ஙனம் முளையாமல் மாய்ந்து போக அறுக்கும் அருந் திறல் உடையான் என்பது தோன்ற 'மாயப்பிறப்பறுக்கும் மன்னன்' என்றார்.

அவ்வண்ணம் ஈசனாய், தேசனாய், அன்பின் நின்ற அறிவுரு வனாய், பிறப்பறுக்கும் மன்னனாய் நின்ற பரம்பொருள் அடியேற்காக எளிவந்து திருப்பெருந்துறை என்னும் தலத் திலே குருநாதனாக எழுந்தருளியது என்பார். 'சீரார் பெருந் துறை நம் தேவனடி போற்றி' என்றார். அரியனாகிய அவன் எனக்கு எளிவந்து அருள் செய்தான் என்பதை 'நம் தேவன்' என்றார். அகளமாய் யாரும் அறிவரிய அப் பொருள் சகளமாய் வந்த கருணை குறிப்பிடப் பெறுகின்றது.

**ஆராத இன்பம்:-** வற்றாத இன்பம். இறைவனை இன்பம் அருளும் மலையாக உருவகித்தமையின் இன்பம் அருவியாகக் கொள்ளக் கிடந்தது. இத்துணையும் வாழ்த்து, வெற்றி, போற்றி என்னும் மூவகையில் முதற்கண் மங்கல வாழ்த் துக் கூறியவாறு.

'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்' 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' : - சிவபெருமானாகிய அவன் என் சிந்தையுள் நிலைபெற எழுந்தருளிய அத்தன் மையாய் அவனது திருவருளாலே அவனுடைய திருவடி- களை வணங்கி என்றவாறு.

**"சிவனெனு நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்":-** எனவரும்திருமுறைப்பகுதிசிவன்என்னும்நாமம்இறைவனுக்கு சிறப்பு திருநாமம் என்பதை விளக்கும். சிவன் அவன் என்றது சமய நிலையுணர்ந்து ஒழுகின்ற பக்குவிகட்குச் சிவனெனச் சிறப்பாயும், உணர முடியாத அபக்கிவிகட்கு அவன் எனச் சுட்டனவானன்றி உணர்த்தலும் ஆகாத வண்ணம் பொ- துவாயும் இருக்கும் இயல்பினன் என்பதை விளக்குவதாம்.

சிவன் அவன் என்னும் இரு சொல்லில் அவன் என்பது முழுமுதற்கடவுளைச் சுட்டும் பெயரளவாய் நின்றது. ஒன்றோடு ஒன்று ஒவ்வாச் சமயத்தினர் எல்லோரும் இறைவனைக் குறிக்கும் இடத்துப் பொதுப் பட அவன் என்று வழங்குதலின் அந்தப் பொதுப் பெயரைப் பின்னும், அம்முதல்வன் இயல்பைச் சிறந்து எடுத்து வழங்கும் சைவ சமயத்திற்கேயுரிய சிவன் என்னும் பெயரை முன்னும் வைத்தார் என்பர் மறைமலையடிகளார்.

எல்லாம் கடந்து மிகச் சேய்மைக் கண் உள்ளோன், ஆங்கு நின்றும் குருமணியாக வந்து அருள் செய்தான். அங்ஙனம் செய்தவன் சிவன் என்று தெளிந்தவாறு கூறியதாம். அவன் தாள் வணங்குதற்கே அவன் அருள் காரணமாயின், பிற செயல்களைச் செய்யார். செய்வாராயின் அதுவும் ஒரு பெரும்பயன் தருவதாகவே அமையும். ஆதலால் அதுவும் அவன் அருள்தர வந்ததாம்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 350 ஆண்டுகள் பழமையான வரலாற்றுடன் தொடர்புடைய திருக்கோணமலை விசுவநாதர் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



### திருத்தல அமைவிடம்

சிவபூமியாம் ஈழமணித் திருநாட்டில் சைவ சமயத்தின் தொன்மைப்பாடுகளின் ஊற்றாக விளங்குவது திருக் கோணமலையாகும். இந்நகரம் கிழக்கு மாகாணத்தின் மணிமகுடமாகத் திகழ்கின்றது. ஐம்பெரும் ஈச்சரங்க ளில் முதன்மையான திருக்கோணேச்சரம் அமைந்துள்ள பூமியாகவும், சைவசமய குரவர்களில் திருஞானசம்பந் தர் பதிகம் பாடிய சிறப்புடனும், சோழர்கள் திருப்பணி கள் புரிந்த திருத்தலமாகவும் சைவ உலகில் நிமிர்ந்து நிற்கின்றது.

இத்தகு பெருமை பெற்ற திருக்கோணமலை மாவட் டத்தில் சிவபுரி என்னுமிடத்தில் இத்தலம் அமைந் துள்ளது. இவ்வாலயம் அமைந்திருக்கும் இருப்பிடம் பண்டைய காலத்தில் செங்கற்பணை என்னும் பெய ரைப் பெற்றிருந்தது. இதனைப் புலவர் வே. அகிலேச பிள்ளை விசுவநாதசுவாமி மீது பாடிய ஊஞ்சல் பதி கத்தில் கீழ்வருமாறு பதிவு செய்துள்ளார்.

**"சீரோங்கு திரிகோண மலையினோர் பாற்**
**றிரு வோங்கி வளர் செங்கற் பணையில் வாழும்."**

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்ட இத்தலம் சிவபுரி எனும் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. மூர்த்தியின் பெயர் விசாலாட்சி அம்மன் உடனுறை விசுவ நாதசுவாமி ஆகும். தல விருட்சம் - ஆலமரம். தீர்த்தம் - ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கேணி.

### திருத்தல வரலாறு

இவ் ஆலயம் ஏறத்தாள 350 வருடங்கள் பழமையா னது என்று கூறப்படுகின்றது. செங்கற்பணையில் சிவத் திரு. சோமலிங்க முதலியார் ஒரு சிறிய கோயில் ஒன்றை அமைத்து அங்கு சிவலிங்கம் ஒன்றையும் வைத்து வழிபட்டு வந்தார். பின்பு கதிர்காம முதலியோர், அதே செங்கற்பணையில் வேறோர் இடத்தில் மடாலயம் ஒன்றை அமைத்து முன்பு வழிபட்டு வந்த இலிங்கத்தை மடாலயத்தில் நிலைப்படுத் தல் செய்து, அருகில் கேணியையும் அமைத்து குடமுழுக்குச் செய்தார். இவ்வாறு நீண்ட காலம் வழிபட்டு வந்த இவ்விடத் திற்கு காசியிலிருந்து பாதயாத்திரையின் பொருட்டு வருகை தந்த சந்நியாசியொருவர் தான் ஆத்மார்த்த பூசை செய்வதற்காக காசிப்பதியிலிருந்து கொண்டு வந்த சிவலிங்கத்தை செங்கற்பணையில் அமைந்துள்ள கோயிலில் நிலைப்படுத்தல் செய்து, 'விசுவநாதசுவாமி' என்று பெயரிட்டுப் போற்றினார். அன்று தொடக்கம் இக்கோயில் காசி விசுவநாதர் போல திருக்கோண மலை விசுவநாதசுவாமி கோயிலாக பெயரும் சிறப்பும் பெற்றது.

இக்கோயில் சிவத்திரு. கதிர்காம முதலியாருடைய பரம்பரை வழிவந்த சிவத்திரு. த. வேலுப்பிள்ளை, சிவத் திரு. வே. அகிலேசபிள்ளை ஆகிய இருவரும் கோயில் பரிபாலனப் பொறுப்பாளராக இருந்து செயற்பட்டு வந்தனர்.

இக் கோயிலில் முதல்முதலில் 1898 ஆம் ஆண்டு குட முழுக்கு நிகழ்ந்துள்ளது. அப்போது நடேசருக்கும் தனியாக கோயில் அமைக்கப்பட்டது. 1909 ஆம் ஆண்டு முன்னைய கோயில் பரம்பரையைச் சேர்ந்த சிவத் திரு. அ. இராசகோன், சிவத்திரு. வைரவப்பெருமான் என்பவரும் சேர்ந்து குடமுழுக்கினை நிகழ்த்தினர். 1939 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் ஏற்பட்ட ஐப்பானி யரின் குண்டுத்தாக்குதலால் ஆலயங்கள் எல்லாம் வழி

பாடற்று மூடப்பட்டிருந்தது. பல ஆண்டுகளுக்குப் பின் மக்களும், ஆலய நிர்வாக சபையினரும் ஆலயத்தில் கரிசனை கொண்டு புதுப்பித்தல் திருப்பணிகளை மேற்கொண்டு, 1957 ஆம் ஆண்டு குடமுழுக்கு செய்வித்து மீண்டும் வழிபாடுகளைத் தொடக்கி வைத்தனர்.

1990 ஆம் ஆண்டு இலங்கைக்குள் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் இவ் ஆலயம் சேதத்திற்கு உள்ளாக்கப் பட்டது. பலவருடங்கள் வழிபாட்டுப் பாவனையில் இருந்த தேர் எரியூட்டப்பட்டது. பின்பு புனருத்தாரண திருப்பணிக்குழுவின் அயராத முயற்சியினால் 1999 ஆம் ஆண்டு குடமுழுக்கு நிகழ்த்தப்பட்டது. அதன் நினைவாக குடமுழுக்குச் சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட்டது. அதன் பின்பு இரு தடவைகள் குடமுழுக்குக் கண்ட கோயிலாக விளங்கியுள்ளது. இவ் வரலாற்றை உற்று நோக்கின் தொடர்ச்சியாக 137 ஆண்டுகள் சிவாகம முறைப்படி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

## திருக்கோயில் அமைப்பு

கோயில் சிவாகமம் கூறும் விதிப்படி அமைக்கப் பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் மடாலயமாக விளங்கிய இக்கோயில் தற்போது பேரமைப்புடைய ஆலயமாகத் திகழ்கின்றது. ஏறத்தாள 29 அமைப்புக்கள் உடையதாக விளங்குகின்றன. கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சண்டேசுவரர், விசாலாட்சியம்மன், கருவறை, நிருத்த மண்டம், ஆடல்வல்லான் சந்நிதி, கொடிமர மண்டபம், யாகசாலை, களஞ்சியசாலை, வாகனசாலை, பிள்ளையார், சிவன், முருகன், ஒன்பான்கோள்கள் (நவக்கிரகம்), நாகதம்பிரான், வைரவர், சந்திரன், சூரியன் ஆகியோருக்குரிய கோயில்கள், வசந்த மண்டபம், யாகசாலை, கோபுரவாசல், கோபுரவாசல் மண்டபம், மணிக்கோபுரம், தாமரைக்குளம், தேர்முட்டி ஆகிய அமைப்புகளுடன் இணைந்த பேராலயமாகத் திகழ்கின்றது.

## பூசைகளும் விழாக்களும்

சிவாகம விதிப்படி ஆறுகாலமும் நித்திய பூசை இடம்பெற்று வருகின்றது. ஆனிமாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்தவாரியாகக் கொண்டு பத்து நாட்கள் பெருந்திருவிழா நடைபெறும்.

சிவவிரதங்களுக்கு பெயர் பெற்ற பதியாக விளங்குகின்றது. கழுவாய் (பிரதோசம்) வழிபாடுகள் சிறப்பாக இடம்பெறுகின்றது. சிவனிரவு (சிவராத்திரி) பெருவிழாவாக அதிக பத்தர்களரல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. திருவெம்பாவைக் காலத்தில் ஆதிரை அருட்காட்சி, நடராசர் திருமஞ்சனம், திருவாதவூரடிகள்



புராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கமும் நடைபெற்று வருகின்றது.

## தல இலக்கியங்கள்.

புலவர் வே.அகிலேசபிள்ளை அவர்கள் பாடிய விசுவநாத சுவாமி திருவூஞ்சல் பாடல் மிகவும் கவித்துவமும் பத்தியும் ததும்பியது. இதேபோல் விசுவநாத சுவாமிஉடனுறையும் அம்மன் மீதும் ஊஞ்சல் பதிகம் பாடியுள்ளார். மற்றும் விசாலாட்சியம்மை மீது பெருங்கழி நெடில் விருத்தமும் பாடியுள்ளார். பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் இத்தலத்தின் மூர்த்தி மீது எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் பாடியுள்ளார். மணிமேகலாதேவி கார்த்திகேசு அம்மணி அவர்கள். ‘விசலாட்சியம்மன் உடனுறை விசுவநாதர் மீது பள்ளி எழுந்தருளல் பாடித் துதித்துள்ளாம்.

**“ஆதிகோனை நாயகர்க்கும் அம்மையவர் மாதுமைக்கும்
வேதியர்கள் போற்றும் விஸ்வ நாத விசாலாட்சி யார்க்கும் மங்களம்”**
**- (பண்டிதர் இ. வடிவேல் பாடிய மங்களம்)**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்




**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முறைசெய்வோம்"**

### திருக்கோலக்காவினில் கண்ட அருட்கோலக்காட்சி

திருநீடூர் தலத்தில் நின்ற பரமனைப் பணியா விடலாமே என உருகிப் பாடிய வன்தொண்டர், அங்கிருந்து புறப் பட்டுப் பல தலங்களைத் தரிசிக்கின்றார். திருப்புன்கூர் தலத்தினை அடைந்து, அங்கு அண்ணலாரை வணங் கிப் போற்றிப் பரவியவாறே திருக்கோலக்கா எனும் திருத்தலத்தை வந்தடைகின்றார்.

மணம் கமழும் மலர்ச்சோலைகள் சூழ்ந்த திருக் கோலக்காவின் எல்லைக்குள் நுழையும் வேளையில், கங்கையைத் தனது சடையில் வைத்திருக்கும் பரம் பொருள், சுந்தரருக்கு நேரே தோன்றி எதிர்க்காட்சி தந்தருளுகின்றார். எதிர்பாராத இந்தப் பேரருள் கண்டு பெருமிதம் கொண்ட சுந்தரர், பொங்கும் காதலோடு ஆதிமூர்த்தியைப் பணிந்து, 'கோலக்காவினில் கண்டு கொண்டேனே' எனும் பாமாலையைச் சூட்டி மகிழ் கின்றார்.

இத்திருவருள் நிகழ்வைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பாடலில் இனிது விளக்குகின்றார்:

**அங்கண் இனிதமர்ந்தருளால் திருப்புன்கூர் அணைந்திறைஞ்சிக்
கொங்கலரும் மலர்ச்சோலைத் திருக்கோலக்கா அணையக்
கங்கைசடைக் கரந்தவர்தாம் எதிர்காட்சி கொடுத்தருளப்
பொங்கு விருப்பால் தொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார்.**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 153)**

சுந்தரர் இத்தலத்தினைத் தரிசிப்பது இது இரண்டாம் முறையாகும். முன்னர் ஒருமுறை திருவாரூர் செல்லும் வழியில், சீகாழிக்கு அருகில் வந்தபோது, அழுதுலகை வாழ்வித்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் தோன்றிய பதி என்பதால், அத்தலத்துள் பாதம் பதிக்க அஞ்சி ஊரை வலமாகச் சுற்றி வந்தார். அந்த முதற்பயணத்தின் போதும் அவர் திருக்கோலக்கா தலத்தைத் தரிசித்துப் போற்றியுள்ளார்.

இதனைத் திருமலைச் சருக்கத்தில் சேக்கிழார் பெரு மான், 'திருக்கோலக்கா வணங்கிச் செந்தமிழ் மாலை கள்பாடி' - (திருமலைச் சருக்கம்: திருப்பாடல் 260) என்று பதிவு செய்துள்ளார். எனினும், அந்த முதல் யாத்திரையில் நாவலூர் வேந்தர் அருளிச் செய்த திருப் பதிகம் நமக்கின்று கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோலக்கா இறைவனைத் தரிசித்துப் பரவிய பின்னர், சுந்தரர் மீண்டும் முன்னைப் போலவே சீகாழி யுள் பாதம் பதிக்காமல் வலமாய்ச் சென்று, அதன்

எல்லையிலிருந்து நிலத்தில் உடல் தோயுமாறு காழிப் பதியை வணங்குகின்றார். முத்தமிழ் விரகராகிய சம்பந்தச் செல்வரின் திருவடிகளை உளத்துள் தொழுதவாறே திருக்குருகாவூர் எனும் தலம் நோக்கித் தனது பயணத்தைத் தொடர்கின்றார்.

இதனை ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தின் 155-ஆம் பாடல் பின்வருமாறு விளக்குகிறது:

**மூவாத முழுமுதலார் முதற்கோலக்கா அகன்று**
**தாவாத புகழ்ச்சண்பை வலம்கொண்டு தாழ்ந்திறைஞ்சி**
**நாவார் முத்தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்**
**மேவார்தம் புரம்செற்றார் குருகாவூர் மேவுவார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 155)**

இறைவர் ஞானசம்பந்தப் பெருமானின் பொருட்டு, சீகாழிப் பதியை வலம் வரும் ஒவ்வொரு முறையும் சுந்தரருக்குத் திருக்காட்சி நல்கிப் பெருமைப்படுத்தியுள்ளார். முதலாவது முறை புகலி நகரை வலம் வந்தபோது திருத்தோணிபுர இறைவர் எதிர்க்காட்சி கொடுத்தருளினார். இரண்டாவது முறையாக இப்போது காழியை வலம் வரும்போது கோலக்கா உறை முதல்வர் எதிர்க்காட்சி நல்கியுள்ளார். இவ்வாறு சம்பந்தப் பெருமான் மீது தம்பிரான் தோழர் கொண்டிருந்த ஒப்பற்ற பக்தியையும், அதன் விளைவாக இறைவன் அவருக்குக் காட்டிய அருளினையும் இத்திருத்தல நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

### அடியார்க்கு அமுது ஈந்த வெள்ளடை வள்ளல்

திருக்கோலக்காவில் இறைவனின் எதிர்க்காட்சியைக் கண்டு களித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், எண்ணிறந்த அடியவர்களும் சுற்றத்தார்களும் உடன்வரத் திருக்குருகாவூர் எனும் தலம் நோக்கிப் பயணித்து வருகின்றார். இத்தலத்தில் உறையும் சிவபெருமானின் திருக்கோயில் ‘வெள்ளடை’ என்று போற்றப் பெறுகின்றது.

நெடுந்தொலைவுப் பயணத்தினால் தம்பிரான் தோழரும் அவருடன் வந்த அடியவர்களும் பசி மற்றும் தாகத்தினால் மிகவும் வாட்டமுற்றனர். தனது அன்பர்களின் வருத்தத்தைத் தரிக்கவொண்ணாத வெள்ளடை இறையவர், ஒரு வேதியர் வடிவம் தாங்கித் திருவருள் புரியத் திருவுள்ளம் கொண்டார். பொதிசோறு மற்றும் நன்னீருடன் கூடிய குளிர்ச்சியான பந்தல் ஒன்றினை அமைத்து, வன்தொண்டரின் வருகையினைப் பரிவுடன் எதிர்நோக்கி வழிமேல் அமர்ந்திருந்தார்.

இந்த அற்புதத்தினைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு விவரிக்கின்றார்:

**உண்ணீரின் வேட்கையுடன் உறுபசியால் மிகவருந்திப்**
**பண்ணீர்மை மொழிப் பரவையார் கொழுநர் வரும் பாங்கர்க்**
**கண்ணீடு திருநுதலார் காதலவர் கருத்தறிந்து**
**தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவழிச் சார்கின்றார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 156)**

தொண்டர்களுடன் அப்பந்தலுள் புகும் நாவலூர் மன்னர், திருநீற்றுத் திருக்கோலம் துலங்க நின்றிருக்கும் சிவ வேதியரைப் பெருகும் ஆர்வத்துடன் நோக்குகின்றார். ‘சிவாயநம’ என்று திருநாமத்தைக் கூறியவாறே அங்கு அமர்கின்றார்.

**குருகாவூர் அமர்ந்தருளும் குழகர்வழி பார்த்திருப்பத்**
**திருவாரூர்த் தம்பிரான்தோழர் திருத்தொண்டருடன்**
**வருவார்அப் பந்தரிடைப் புகுந்து திருமறையவர் பால்**
**பெருகார்வம் செலஇருந்தார் சிவாயநம எனப்பேசி**
**-(ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 157)**




வேதியராய் எழுந்தருளியிருந்த பரம்பொருள், பரவையார் கேள்வரிடம், **“நீவிர் மிகவும் பசித்திருக்கின்றீர் காலம் தாழ்த்தாது இப்பொதி சோற்றினை உண்டு, நறுமணம் பொருந்திய இக்குளிர்ந்த நீரையும் பருகிச் சிறிது இளைப்பாறுவீர்”** என்று கூறிப் பேரருள் புரிகின்றார்.

**ஆலநிழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச்**
**சாலமிகப் பசித்தீர் இப்பொதிசோறு தருகின்றேன்**
**காலம்இனித் தாழாமே கைக்கொண்டிங்கினிதருந்தி**
**ஏலநறும் குளிர்தண்ணீர் குடித்திளைப்புத் தீரஎன**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 158)**

மறையவரின் விண்ணப்பத்திற்கு இசையும் சுந்தரனார், உடனிருந்த சுற்றத்தார்கள் யாவருடனும் சிவப்பிரசாதமான அப்பொதி சோற்றினை அமுது செய்து மகிழ்கின்றார். திருவருளின் இனிமையையொத்த அக்குளிர்ந்த நன்னீரையும் பருகி, உள்ளத்திலெழும் காதலன்பினால் முக்கண் முதல்வரின் திருநாமத்தைப் போற்றி செய்து, அப்பந்தலிலேயே அயர்வு நீங்கச் சிறிது துயில் கொள்ள, உடனிருந்தோரும் கண்ணயர்கின்றனர். உறங்கியெழுகையில் அங்கிருந்த பந்தலையும் வேதியரையும் காணாது திகைத்த சுந்தரர், நடந்தேறிய யாவும் வெள்ளடை நாதரின் திருவருட் செயலே என்றுணர்ந்து நெகிழ்ந்துருகினார். கண்ணீர்மல்க, ‘குருகாவூர்வெள்ளடைநீயன்றே’எனும்திருப்பதிகத்தினால் இறைவனைப் போற்றிப் பரவுகின்றார்.

**பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்**
**ஓடு நன்கலனாக உண்பலிக்குழல்வானே**
**காடு நல்லிடமாகக் கடுஇருள் நடமாடும்**
**வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே**
**- (சுந்தரர் தேவாரம்: திருக்குருகாவூர் - திருப்பாடல் 3)**

இவ்வாறாக, தன்னை நாடி வரும் பத்தர்களின் பசியையும் பவப்பிணியையும் தீர்க்கும் பரம்பொருளின் கருணையைத் திருக்குருகாவூர் தலம் உலகுக்கு எடுத்தியம்புகிறது. தம்பிரான் தோழர் சம்பந்தப் பெருமான் பால் கொண்டிருந்த பத்தியால் சீகாழியை வலங்கொண்டு வர, குருகாவூர் அண்ணல் அவர் பசி தீர்த்து ஆட்கொண்ட விதம் அற்புதம் அன்றோ!

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# அலைமலிந்த புனல்மங்கை எம்பிரான் ஆனாய நாயனார்




உடலை வருத்தி பத்தி செய்யாமலும், சிவத்தொண்டு செய்யாமலும், இசையால் சிவபெருமானை வணங்கி, அந்த இசையையே சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்து பேரின்பத்தை அடையலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக திகழ்ந்த ஆனாய நாயனார், சோழ வள நாட்டில் உள்ள திருமங்கலம் என்னும் திருத்தலத்தில் ஆயர் குலத்தில் பிறந்தார். இவர் தம் குலத்திற்கேற்ற தொழிலை செய்த போதும் மனத்தாலும் வாக்காலும் மெய்யாலும் சிவபெருமானையே எண்ணி, எந்நேரமும் சிவபெருமானை மனதில் நினைத்து புல்லாங்குழலிலே பெருமானது அஞ்செழுத்தைப் பொருளாகக் கொண்ட குழலிசைப்பதை வழிபாடாகக் கொண்டு வாழ்ந்தார்.

இவரின் இன்ப இசைக்கு உயிரினங்கள் அனைத்தும் மெய்மறந்து நிற்கும் என்பதை,

**"எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்து அஞ்சும்
தொடுத்த முறை ஏழ் இசையின் சுருதி பெற வாசித்து
அடுத்தசரா சரங்களெலாம் தங்கவருந் தங்கருணை
அடுத்த இசை அமுது அளித்துச் செல்கின்றார் அங்கொருநாள்"**

**- (திருத்தொண்டத்தொகை 12:34:14)**

எனத் திருத்தொண்டர் புராணத்தில் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.



**செல்வி.**
**நவிசா ஈஸ்வரானந்தம்**
**கலைமாணி**

வழமைபோல் பசுக்களுடன் காட்டுக்கு வந்த ஆனாயர், அங்கு மாலை தொடுத்தது போன்ற பூங்கொத்துக்களும், புரிசடை போல் தொங்கும் கனிகளும் நிறைந்த ஒரு கொன்றையினைக் கண்டார். அது மனத்துள்ளே எப்பொழுதும் கண்டுகொண்டிருந்த கொன்றை மாலை சூடிய சிவபெருமானைப் போல அவருக்குத் தோன்றிற்று. அத்திருத்தோற்றப் பொலிவினில், சிவனையே பார்த்து விட்டாற் போன்ற பெருமகிழ்ச்சி பூண்டார் அடியார்! அவரது ஐம்புலன்களும் பத்தியால் பூரித்தன.

ஆனாயர் அம்மரத்தை வலம் வந்து வணங்கினார். தாம் வைத்திருந்த வேய்ங்குழல் பலவற்றில் சிறந்ததான ஒன்றை எடுத்தார். ஆனாயர் பரமனை நினைத்தபடியே பண் ஒன்றை எழுப்பினார். அவர் சுத்த சுரத்திலே திருவைந்தெழுத்தை இசையுடன் அமைத்து முறையோடு சுருதி சேர்த்து வாசிக்கலானார். ஐந்தொலியின் இசை இன்பம் வெள்ளம் போல் பாய்ந்து ஓடியது. திருவைந்



தெழுத்தை உள்ளுறையாகக் கொண்ட வேய்ங்குழல் இசை ஒலியை எம்மருங்கும் பரப்பினார். அது கற்பகப் பூந்தேனும் தேவாவமுதமும் கலந்து வார்ப்பது போல எல்லா உயிர்களுக்குள்ளும் புகுந்து உருக்கிற்று.

அசை போட்டபடியாக நின்று கொண்டிருந்த ஆநிரைகள் ஆனாயர் இசைக்கு மயங்கி அவரது அருகே வந்து நின்றன. கன்றுகளோ தாய்ப்பாலையும் மறந்து இன்ப இசையில் உணர்விழந்து ஆனாயரைச் சுற்றி நின்றன. மான் கூட்டங்கள் துள்ளி ஓடிவந்து ஆனாயரைச் சூழ்ந்தன. பல்வேறு ஆக்க வேலைகளில் அதிகப்படியாக ஊக்கம் காட்டி நின்ற ஆயர்கள், தங்கள் வேலைகளை மறந்து இசை வெள்ளத்தில் மூழ்கி நின்ற இடத்திலேயே செய்வதறியாது செயலற்று நின்றனர். வானவரும் விஞ்சயரும் புட்பக விமானத்தில் அமர்ந்த வண்ணம் ஆனாயரின் இசைத்தேனைச் சுவைத்துப் பருகிக்கொண்டிருந்தனர். ஆனாயர் தேவகான இசை மழை பொழிந்த வண்ணமாகவே இருந்தார். உலகில் அனைவரும் ஒருமனப்பட்டு உள்ளம் மகிழ ஆனாயரின் இசைக்கடலில் மூழ்கி இன்பம் கண்டனர்.

தோகை விரித்தாடும் மயில் மீது படமெடுத்தாடும் பாம்புகள் மயங்கி விழுந்தன. சிங்கமும், யானையும் பகைமை மறந்து ஒன்றோடொன்று இணைந்தவாறு இசை வசப்பட்டு நின்றன. புலிகளின் முன்னே புள்ளி மான்கள் பயமின்றி நின்று கொண்டிருந்தன. காற்று கூட வேகமாக வீசவில்லை. மரக்கிளைகள் எல்லாம் அசைவற்று இசையில் செயலற்றன. மலையிலிருந்து துள்ளிப் பாய்ந்தோடும் தேனருவிகள் எவ்வித ஓசையும் இன்றி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தன. அலை மோதும் கடல் கூட அமைதியுடன் காணப்பட்டது. மேகக் கூட்டங்கள் இடியும் மழையும் இன்றி வான வீதியிலே அமைதியாக ஊர்ந்து கொண்டிருந்தன. ஈரேழு உலகமும், ஆனாயரின் இசை வெள்ளத்தில் இன்ப சுகம் பெற்றன. உயிருள்ள பொருட்கள் மட்டுமல்ல உயிரற்ற பொருட்களும் கூட ஆனாயரின் குழலோசைக்குக் கட்டுப்படத்தான் செய்தன.

புல்லாங்குழல் இசை விண்ணகத்தை முட்டிய தோடல்லாமல் கயிலையில் அமர்ந்திருக்கும் சிவபெருமானின் திருச்செவிகளுக்கும் கேட்டது. ஆனாயரின் இசை வெள்ளத்திலே மெய்யுருகி ஆனாயரை ஆட்கொள்ள அம்மையப்பராய் எம்பெருமான், இடப வாகனத்தில் காட்சி அளித்து, ஆனாய நாயனாரை குழலூதியபடியே தம்மை வந்தடைய அருளினார். பூமழை பொழிய, முனிவர்களும் தேவர்களும் துதிக்க, புல்லாங்குழல் இசைத்தபடியே சிவபெருமானுடன் சென்று மீளாத பேரின்ப வாழ்வு பெற்றார். ஆனாயர் பெற்ற பேறன்றோ அருந்தவப் பேறு. இக்காட்சியை,

**“விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்து உலகம் மிசை விளங்க**
**எண்ணிலரு முனிவர் குழாம் இருக்கு மொழி எடுத்து ஏத்த**
**அண்ணலார் குழல் கருவி அருகு இசைத்து அங்கு உடன் செல்லப்**
**புண்ணியனார் எழுந்து அருளிப் பொன் பொதுவின் இடைப் புக்கார்”**

**- (திருத்தொண்டத்தொகை 12:34:40)**

எனத் திருத்தொண்டர் புராணத்தில் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். திருவைந்தெழுத்தை வேய்ங்குழலால் இசைத்து முத்தி பெற்ற ஆனாய நாயனார், சிவபெருமானோடு இரண்டறக் கலந்தது கார்த்திகைத் திங்கள் அத்தம் நாண்மீன் நாளில் ஆகும்.

ஆனாய நாயனாரின் குருபூசை, இவர் தோற்றம் பெற்றதும், முத்தி அடைந்துமான திருச்சிலால்குடி அருகே உள்ள திருமங்கலம் திருத்தலத்தில் வருடந்தோறும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தக் கோயிலின் உட்சுற்றில் வடமேற்கே ஆனாயர் சிவப்பேறு எய்திய இடமுண்டு. அங்கே நாயனாருக்கு தனிக்கோயில் உண்டு. நாயனார் கொன்றை மரத்தின் நிழலிலே நின்று புல்லாங்குழல் வாசிக்கும் பாவனையில் மிக அழகான திருமேனியும் உண்டு.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு வண்டமர்பூங்குழலி உடனுறை மாணிக்கவண்ணர் - திருவாளப்புத்தூர்

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவத்தலங்களில் காவிரி வடகரை வரிசையில் 29 ஆவது திருக்கோயில் திருவாளப்புத்தூர்



**“மலைத்தசெந் நெல்வயல் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நினைக்கேனே”**

திருமால் மாணிக்க இலிங்கத்தை நிறுவி வழிபட்டதாலும், அருச்சுனனின் வாளை ஈசன் புற்றில் ஒளித்து வைத்து மீண்டும் வழங்கியதாலும் **“வாழ்கொளிபுத்தூர்”** என்றும் **“வாள்ஒளிபுற்றூர்”** என்றும் பெயர் பெற்று, பின்னாளில் திருவாளப்புத்தூர் என மாறிய அற்புதத் தலமே அருள்மிகு வண்டமர்பூங்குழலி உடனுறை மாணிக்கவண்ணர் உறையும் திருத்தலம்.

**அமைவிடம்:** **மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு.**

மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் பேருந்து பாதையில் இத்தலம் அமைந்துள்ளது. வைத்தீசுவரன் கோயிலிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

**இறைவர் திருப்பெயர்:** **மாணிக்கவண்ணர், இரத்தினபுரீசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்:** **வண்டமர்பூங்குழலி, வண்டால்-குழலம்மை.**
**கோயில் மரம்:** **வாகை மரம்.**
**தீர்த்தம்:** **பிரம்ம தீர்த்தம்.**
**வழிபட்டோர்:** **திருமால், அருச்சுனன், இந்திரன், வாசுகி, வண்டு முதலியோர்.**
**பாமாலை:** **திருஞானசம்பந்தர், சுந்தரர், வள்ளலார்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் (1.40.01):**

**பொடியுடை மார்பினர் போர்விடை ஏறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடை ஊர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளி
புத்தூர்க் கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றான் அடி காண்போம்.**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் (2.94.01):**
**சாகை யாயிர முடையார் சாமமு மோதுவ துடையார்
ஈகை யார்கடை நோக்கி யிரப்பதும் பலபல வுடையார்
தோகை மாமயி லனைய துடியிடை பாகமு முடையார்
வாகை நுண்டுளி வீசும் வாழ்கொளி புத்தூ ருளாரே.**





சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம் (7.57.01):

**தலைக்க லன்தலை மேல்தரித் தானைத்**
**தன்னைஎன் னைநினைக் கத்தரு வானைக்**
**கொலைக்கையா னையுரி போர்த்துகந் தானைக்**
**கூற்றுதைத் ததுரை சேர்கழ லானை**
**அலைத்தசெங் கண்விடை ஏறவல் லானை**
**ஆணை யால்அடி யேன்அடி நாயேன்**
**மலைத்தசெந் நெல்வயல் வாழ்கொளி புத்தூர்**
**மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே**

## திருத்தலச் சிறப்பு

திருமால் இங்கு மாணிக்க இலிங்கத்தை நிறுவி வழிபட்டதால் இறைவனுக்கு **"மாணிக்கவண்ணர்"** என்று பெயர். இறைவன் திருமேனி மாணிக்கம் போன்ற ஒளியுடையது என்பதால் இத்தலம் **"வாள்ஒளி"** (மிக்க ஒளி) புத்தூர் எனப்பட்டது. வாகை மரத்தின் அடியில் இருந்த புற்றில் அருச்சுனனின் வாளை ஈசன் ஒளித்து வைத்ததால் **"வாள் ஒளிபுற்றூர்"** என்றும் பெயர் பெற்றது.

இங்குள்ள தென்முகக்கடவுள் (தட்சிணாமூர்த்தி) சிம்ம மண்டபத்தில் அமர்ந்துள்ளார். இவருக்கு முன்னும் பின்னும் நந்திகள் இருப்பது சிறப்பான அமைப்பு. எண் நாகங்கள் சூழ அதன் மத்தியில் அருளும் **"அட்ட நாக விநாயகர்"** நாக தோசங்களை நீக்கும் அருளாளராகத் திகழ்கிறார்.

இங்குள்ள மலைமகள் கையில் கிளியுடன் சாந்த வடிவினராகக் காட்சி தருகிறாள். ருதுகேதன் என்ற மன்னனின் வேண்டுகோளுக்காக ஈசன் மாணிக்க மழையைப் பொழிந்து மக்கள் பசியைப் போக்கிய அற்புதத் தலம் இது.

## திருத்தல வரலாறு

பாண்டவர்கள் வனவாசத்தின் போது அருச்சுனன் இத் தலத்திற்கு வந்தான். அவனது தாகம் தீர்க்க ஈசன் முதியவர் வடிவில் வந்து வழிகாட்டினார். அருச்சுனன் தனது வாளை அம்முதியவரிடம் கொடுத்துவிட்டு நீர் தேடிச் சென்றான். இறைவன் அந்த வாளை வாகை மரத்தின் அருகிலிருந்த புற்றில் மறைத்து வைத்தார். அருச்சுனன் திரும்பி வந்து தேடியபோது, வாள் ஒளியுடன் புற்றில் இருப்பதைக் கண்டு ஈசனின் அருளை உணர்ந்து வழிபட்டான். இதையே தலபுராணம் **"உன்கரவாள் நின்ற வாகையின் அயல் புற்றொளித்தான்"** என்று குறிப்பிடுகிறது.

மேலும், பாற்கடலில் நஞ்சு வெளிப்பட்ட போது அஞ்சிய வாசுகிப் பாம்பு, இத்தலத்து வன்னி மரத்தடியில் தவம் செய்து இறைவனால் மன்னிக்கப்பட்டு, ஈசனின் ஆபரணமாக மாறும் பேறு பெற்றது.

## திருக்கோயில் அமைப்பு

இத்தலம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முகப்பு வாயிலைக் கடந்து சென்றால் நந்தியும் பலிபீடமும் உள்ளன. கருவறையில் மாணிக்கவண்ணர் சுயம்பு இலிங்கமாக அருள் பாலிக்கிறார். அம்பாள் வண்டமர்பூங்குழலிக்குத் தனிச் சன்னதி உள்ளது.

வீதியில் விநாயகர், முருகன், வேழத்திரு (கஜலட்சுமி), கலைமகள், பைரவர் மற்றும் நால்வர் சன்னதிகள் உள்ளன. இங்குள்ள மண்டபங்கள் வௌவால் நெற்றி அமைப்பில் பழமை மாறாமல் அமைந்துள்ளன. தென்முகக்கடவுளுக்கு நேர் எதிரே மெய்க்கண்ட நாயனார் சன்னதி அமைந்துள்ளது ஒரு சிறப்பம்சமாகும்.

**திருச்சிற்றம்பலம்**



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**பாடல் - 22**

**தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானை மன்னன்
பனிப்பில்சிந் தையினி லுண்மைப் பான்மை சோதித்தா லென்ன
மனித்தர் தன் வரவு காணா வண்ணமோர் வண்ணநல்லான்
புள்ளிளங் கன்று துள்ளிப் போந்ததம் மறுகினூடு**

**பொருள்:** ஒப்பற்ற பெருமையினையுடைய அறக்கடவுள் சிறிதும் கருணையின்றி அரசரது துளங்காத சிந்தையின் உண்மைத் தன்மையை சோதித்தற்கு வந்தாற்போல, தனது வரவைச் சூழ இருந்த பலருள்ளும், அந்த மணிமாட வீதியில் இருந்தாருள்ளும், எந்த மனிதரும் காணாதபடி ஓர் அழகிய பசுவினது மிக இளைய கன்று அவ்வீதியிடை துள்ளிப் புகுந்தது.

**வி-உரை :** தனிப்பெரும் தர்மம்:- ஒப்பற்ற தருமம் ஆகிய கடவுள் சிறுமையினும் தனித்தன்மை உளதாதலின் அதனை நீங்கித் தனித் தர்மம் என்னாது தனிப்பெரும் தர்மம் என்றார்.

**தருமம்:-** இவ்வரசன் புற்றிடங் கொண்டார்க்கு நிபந்தம் முதலியன ஆகம வழி ஆராய்ந்து இயற்றியது முதலிய சிவதர்மங்களின் அதி தெய்வமாகக் கொள்ளப்படும் கடவுள் என்க. மிக மேலாகிய சிவ தருமங்களின் முன்னே



**சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்**



**பவானி சிவ
அ.வேலுச்சாமி**

வேறு பசு பாச தர்மங்கள் எவையும் பொருளாகாமையின் இதனையே தனிப் பெரும் தருமம் என்றார் என்று சிவக்க விமணி ஐயா அவர்கள் பதி புண்ணியத்தின் பெருமையை விளக்கி அருளியுள்ளார்கள்.

**ஓர் தயாவின்றி:-** ஒரு சிறிதும் கருணை யில்லாமல் தருமக் கடவுள் இடத்திலே இருக்க வேண்டிய ஓர் தயாவின்றி தர்மம் எஞ்ஞான்றும் தயவுடன் கூடியிருத்தல் வேண்டும் என்பது எல்லாரும் ஒப்புவதாம்.

**பனிப்பில் சிந்தை:-** அசையாத மனத் திண்மை முக்தி பெறுவதற்கு இஃதே காரணமாயிற்று. **“துளங்காத சிந்தை பாராய்த் துறந்தோர் உள்ளப்பெரும் பயனை”** என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. சிந்தையில் நிலைபெற்று நிற்கின்ற என்றலுமாம்.

**உண்மைப் பான்மை:-** அரசனது கலங்கா மனதிலே நிலைத்துள்ள உள்பொருளினது தன்மை அது கண்ணும் ஆவியுமாம் ஆகுமாம் பெருங்காவல் என்று மேலே முதலாவதாக எடுத்துக் கூறியதன்மை கழறிற்றறிவார் நாயனாரது உள்ளக் கிடக்கையே போல இவ்வரசனும் எல்லா உயிர்க்கும் காவல் புரிதலே கடமை என்பதைத் தன் உள்ளக் கிடக்கையாகக் கொண்டவன் என்க.

**சோதித்தால் என்ன:-** சோதிப்பதற்காக வந்தது போல் எல்லாம் அறிந்த அறக்கடவுளுக்கு மன்னனது சிந்தையின் உண்மையைச் சோதித்து அறிய வேண்டியது அவசியமில்லாமையின் சோதிக்க என்னாது, சோதித்தாற் போல என்றார். அடியார்களுடைய உள்ளக்கிடக்கையை உலகினர்க்குக் காட்டுதலே காரணம் **“தொண்டரை விளக்கம் காண என்று நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தோர் விரும்பி உய்யும் அந்நெறி காட்டுமாற்றால் அருட் சிவயோகி ஆகி”** என்பது திருநீலகண்ட நாயனார் புராணம்.

**மனித்தர் தம் வரவு காணா:-** அறக்கடவுளின் செயல் வெறும் மனிதர்களின் ஊனக் கண்ணுக்கு புலப்படாமையின் காணா வண்ணம் என்றார்.

**புனிந்து இளம் :-** மிக இளமைஉடைய கன்று

**திருநகரச் சிறப்பு:-** பாடல் - 26

**“வந்த இப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில்
எந்தைஈது அறியா முன்னம் இவற்றுவன்” என்று மைந்தன்
சிந்தைவெம் துயரம் தீர்ப்பான் திருமறை யவர் முன் சென்றான்**

**பொருள் :** இவ்வாறு வந்து புகுந்த இப்பழியை மாற்றும் வகையை வேதம் முதலிய நூல்களும், அவற்றின்படி ஒழுகும் வாய்மை அந்தணர்களும் விதிக்கின்றபடி செய்வது தருமமாயிருக்குமானால் எந்தந்தை இதனைத்

தெரிவதற்கு முன்னமே அது செய்து முடிப்பன் என்று துணிந்து, அரசகுமாரன் மனத்தில் மிகுந்த வருத்தத்தைத் தீர்க்கும்படி அந்தணர்களிடம் போயினான்.

**வி-உரை : அந்தணர்:-** எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும் அறவோர், பிறிதொரு உயிர்க்கு வந்த துன்பத்தைப் போக்கும் வழி அவ்வுயிர்களிடத்தே செவ்விய தண்ணளிப்பூண்டு ஒழுகுவதற்கே கைவருமாதலால் அந்தணர் என்றார். பின்னர், அரசன் அவர்கள் அந்தணர்கள் ஆகாது மறையவர்களே ஆகி நின்றார்கள் - என்று முடித்துக் காட்டும் குறிப்புப் பெறும் பொருட்டு பின்னர் **"மறையவர் முன்"** என்றார்.

**மாற்றும் வகை:-** அறநூல் விதி வழி செய்யும் கழுவாய். இதனை பிராயச்சித்தம் என்பர். பசுக் கொலைக்கு கழுவாய், இறந்த பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டு ஒரு வேளை உணவு உண்டு, அப்பசு மந்தையில் ஆறு மாதம் வாசம் செய்து, அப்பசு கூட்டத்தைக் காப்பாற்றி வருதல் என்பர்.

**மறையவர் முன் சென்றான்:-** தானே தெய்வக்கலை பல திருத்த ஓதியவனாயினும் அறிவழிந்து விழுந்தமையாலும், தன் காரியமேயாதலின் பிறர் சொன்னபடி நிற்றலே பழி நிகழாது காக்கக் காரணமாகின்றமையாலும், மறையோர் முன் சென்றான்.

**குறிப்பு:-** போற்றிப் பஃறொடை நூலில் உமாபதி சிவாச்சாரியார் **"ஓடிய தேரின் கீழ் உயிர்போன கன்றாலே நீடு பெறும் பாவம் இன்றே நீங்கும் என - நாடித்தன் மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக"** என்ற பகுதிக்கு முதுபெரும் புலவர், பேராசிரியர், முனைவர் ந.இரா சென்னியப்பனார் அவர்கள் தீயவற்றைச் செய்தால் அதற்குரிய தண்டனையை அனுபவித்து விட்டால் பின்னர் பாவப்பயன் வாராது என்று உரை எழுதியுள்ளார்கள். சைவசித்தாந்தத்தில் பிராயச்சித்தம் கிடையாது என்பதே கருத்து அதை சேக்கிழார் பெருமானும் தொண்டர் புராணத்தில் எடுத்தருளிருக்கின்றார்கள்.

**பாடல் - 27**

**தன் உயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியாது ஆகி**
**முன்நெருப்பு உயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார**
**மன் உயிர் காக்கும் செங்கோல் மனுவின் பொன் கோயில் வாயில்**
**பொன் ஆணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்தது அன்றே**

**பொருள் :** தன் உயிர் போன்ற கன்று இறந்து படப் பசு அத்துயரத்தைத் தாங்க முடியாததாகி, முன்னே நெருப்பு வீசுதல் போலப் பெருமூச்சு விட்டு விம்மிக் கொண்டு, முகத்திலேயே கண்ணீர் பெருக, எழுந்து நடந்து சென்று உலகத்திலே நிலைபெற்ற எல்லா உயிர்களையும் காக்கின்ற செங்கோன்மை வல்ல மனு அரசனது அழகிய அரண்மனை வாயிலில் கட்டிய அழகிய மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது அப்போதே.

**வி-உரை : பொற்கோயில்:-** அரண்மனை இலக்குமியைக் கொண்ட திருமால் போன்று காவல் தொழில் செய்யும் அரசன் வாழும் இடம் ஆதலின் பொற்கோயில் என்றான்.
**பொன் ஆணி மணி:-** பொன்னினாலே அழகு செய்யப்பட்ட மணி. இதனை ஆராய்ச்சி மணி என்பர். தனது குறையை மணி அடிப்பதன் மூலம் வேறொருவர் உதவியின்றி தாமே அறிவித்துக் கொள்ளும் பொருட்டு அரண்மனை வாயில் வெளியில் ஒரு மணியைக் கட்டிவைப்பது அந்நாள் அரசர் நீதிமுறை வழக்கங்களில் ஒன்று. இது பசு உருவுடையதேயாயினும் பசுவல்லாது இறைவனது அருளாகிய அறக்கடவுளே ஆதலின் அருளை வெளிப்படுக்கும் தேவர் செயலைச் செய்தது என்பதும் குறிப்பு.
**செங்கோல்:-** ஒரு பாற் கோடுதலில்லாது யாவரிடத்தும் ஒரே தன்மையாய் நிகழ்வது. இப்பசுவினால் வெளிப்பட்ட இவை துன்பம் போலத் தோன்றினும் முடிவில் அன்பு வெளிப்பாட்டிக்கே ஆயினமை காண்க.

**பாடல் - 28**

**பழிப்பறை முழக்கோ? ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ? வேந்தன்**
**வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறிலி ஊர்திக்**
**கழுத்தணி மணியின் ஆர்ப்போ? என்னத்தன் கடைமுன் கோளாத்**
**தெழித்துஎழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது**

**பொருள் :** பறை முழக்கமோ? கட்டும் இயல்புடைய பாவத்தின் சத்தமோ? அரசனது மரபுக்கு ஒரு மைந்தனாகிய அரசியளங்குமரன் உயிரைக் கைக்கொள்ள வருகின்ற இயமனுடைய ஊர்தியாகிய எருமைக் கடாவின் கழுத்தில் அணிந்த மணியில் பெரும் சத்தமோ? என்று கருதம்படி தனது கடைவாயிலிலே இதற்கு முன் கேட்கப்பெறாத ஆர்த்து எழுகின்ற மணி ஓசையானது மன்னனது செவிப்புலத்தில் புக்க போது.

**வி-உரை :** இதற்கு முன் கேட்ட ஓசைகள் யாவும் அறவோசைகள். இது முன்கேளா ஓசையாதலின் அறத்திற்கு மாறான மற ஓசையேயாம், ஆதலின் மறம் பழியோ? பாவமோ? முறலி வருகையோ? இவற்றுள் யாதாய் விளைவதோ? என்ற ஐயம் தந்தது.

**முன்கேளா:-** இதற்கு முன் கேட்டிராத. இதற்கு முன் அநீதி எதுவும் நடவாததால் அதுபற்றி எழும் மணி ஓசையும் கேளாததாயிற்று. "தூங்கிய மணி" என்று பின்னரும் கூறுதல் காணலாம்.

**பழியிகவே பாவம் மிகும்** - பாவம் மிகவே இயமத் தண்டனை விளையும் - என்று பழிப்பறை முழக்கோ - பாவத்தின் ஒலியோ - மறலி ஊர்தி மணி ஆர்ப்போ - என இம்முறையில் வைத்து ஓதினார்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது திருக்கோயில் வாயிலிலும் ஒரு மணி கட்டி இருந்தது எனவும், திரிபுராதிகளின் கொடுமைக்கு ஆற்றாத தேவர்கள் அதனை அடிக்கவே அதன் ஓசை மாறும் முன்னரே திரிபுரங்கள் தீப்பட்டுச் சாம்பராயின - எனவும் அப்பர் சாமிகள் இறைவனது கருணைப் பெருக்கை விளக்கும்படி மிகச் சுவை பெறுமாறு அருளியிருத்தல் இங்கே நினைவு கூறற்தற் பாலதாம்.

**"மூவா வுருத்து முக்கண் முதல்வமீக் கூரிடும்பை**
**காவா யெனக்கடை தூங்கு மணியைக்கை யாலமரர்**
**நாவா யசைத்த வொலி, யொலி மாறிய தில்லைப்பாற்**
**தீயா எரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே" -**

**(தனிவிருத்தம்) திருமுறை - 04**

**தொடரும்**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**சூரபத்மன் சிம்புள் வடிவம் எடுத்தபோது இந்திரனை மயிலாகக் கொண்டருளிய முருகப்பெருமான், யுத்தம் முடியும்வரை இந்திர மயிலையே வாகனமாகக் கொண்டாரா? அல்லது வேறேதும் வாகனத்தையும் பயன்படுத்திக் கொண்டாரா? ஒருசிலர், முருகப் பெருமான் பல்வேறு வாகனங்களை அதன்பிறகும் பயன்படுத்திக் கொண்டார் என்றும், அதனால் ஆட்டுக்கடா வாகனத்தைப் பொதுவில் பயன்படுத்துகின்றோம் என்றும் நியாயம் செய்வது ஏற்படையதா?**

போரின் இறுதித்தருவாயில் முருகப்பெருமானுடைய திருப்பெருவடிவத்தைக் கண்டு இன்புற்ற சூரபத்மன், முருகப்பெருமான் மயில்மேல் விளங்கி நிற்பதாகவே போற்றுகின்றான்.

**கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்**
**பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்**
**மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்**
**மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ. (7720)**

**பொருள் :** - சிறந்த அழகிய மயிலில் வீற்றிருக்கும் முருகப் பெருமானை அந்தக் காலத்தில் சிறுவன் என நினைத்திருந்தேன். இத்தகைய இவரது தன்மையை நான் அறியேன். ஆராயுமிடத்துத் தேவரில் சிறந்த திருமால் நான்முகன் என்பவர்கட்கும் மற்றத் தேவர்கட்கும் மற்றவர்க்கும் முதற்காரணமாக நின்றுள்ள முதல்வர் இம் முதல்வர் அல்லரோ?

**சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை**
**ஊர்தியின் இருக்கை நீங்கி உணர்வுகொண் டொழுகி நின்ற**
**சூர்திகழ் மஞ்ஞை யேறிச் சுமக்குதி எம்மை என்னாப்**
**பார்திசை வானம் முற்றும் பரியென நடாத்த லுற்றான்**

**பொருள்:-** சிறப்புப் பொருந்த விளங்கும் குமரப் பெருமான் நெருக்கமான கண்களையுடைய இந்திரனான பழைய மயிலினின்றும் இறங்கி, நல்லுணர்ச்சி பொருந்தி வழிபட்டு நின்ற சூரபன்மனான பிரகாசிக்கின்ற மயிலின்மேல் ஏறிக்கொண்டு, எம்மைச் சுமந்திடுக என்று பூமி, திக்குகள், வானம் எல்லா இடங்களிலும் பரியைப்போல் நடத்தினார்.

மேலும், சூரபன்மனை மயிலாக்கி ஏற்றருளியபோது, இந்திர மயிலில் இருந்து இறங்கிச் சூரபன்ம மயில் ஏறியருளினார் என்பதுவே கந்தபுராண முடிவாகும். எனவே, முருகப்பெருமான் இந்திர மயிலினை ஏற்றருளியது முதல், அம்மயிலில் வீற்றிருந்தே போர் செய்தார் என்பது கந்தபுராணத்தில் தெளிவாகவே அருளப்பட்டிருப்பது கண்கூடு. வேறேதும் வாகனங்களை இந்திரமயிலினை ஏற்றுக்கொண்டபிறகு முருகப்பெருமான் பாவித்ததற்குக் கந்தபுராணத்தில் எந்தவொரு சான்றும் இல்லை.

சிவாசாரியர் ஒருவர் இந்திரன் மயிலாகிச் சூரபன்மனுடன் போர் செய்தானேயொழிய முருகப்பெருமான் இந்திரமயிலேறிப் போர்செய்யவில்லை என்று கடிதம் ஒன்றெழுதிச் சமூக ஊடகங்களில் பரப்பியிருப்பது எவ்வகையில் பொருத்தமாகும்?

குறித்த சிவாசாரியர் தானேயெழுதிக்கொண்ட பாசவாக்கியப் புதுப்புராணத்தில் அப்படியிருக்கலாம் என்று அக்கூற்றை ஆன்றோ தள்ளுவதே கடன். சைவசமயத்தாருக்குப் பதிவாக்கியமாக விளங்கும் கச்சியப்ப சிவாசாரியப் பெருமானின் கந்தபுராணமே முடிந்த முடிவாகும். இந்திராதிதேவக்கூட்டத்தார்சூரபன்மனுடன் போர் செய்யமுடியாது தோற்றோடியதன் விளைவே, முருகப்பெருமான் உதிப்பதற்கு காரணமாயிற்று. எனவே, இந்திரன் மயிலாகிப் போர் செய்தான் என்பது வேடிக்கை.

**இத்திறம் பொருத காலைப் பிணிமுகத் தேந்தல் தன்னைப்**
**பைத்தலை யுடைய தூவி பறித்திடா வதன முற்றுங்**
**குத்திவெங் குருதி வீட்டிக் குருமணிக் கலாபம் ஈர்த்து**
**மெய்த்துயர் புரிந்தான் நேமிப் புள்ளுருக் கொண்ட வெய்யோன்.**
**(7673)**

**பொருள் :-** இவ்வாறு போர் செய்தவுடனே, சிம்புள் பறவை வடிவம் கொண்ட சூரபன்மன், மயில் வடிவமான இந்திரனின் பசிய தலையில் உள்ள தூவிகளை எல்லாம் பறித்து, முழுவதும் குத்திக் கொடிய இரத்தத்தை இறைத்து நிறம் விளங்கும் கரிய தொகையை இழுத்து உடலுக்குத் துன்பத்தை உண்டாக்கினான்.

**அச்செயல் முருகன் காணா ஆரழல் என்ன நக்குக்**
**கைச்சிலை யதனை வாங்கிக் கடுந்தொழில் அவுணர் மன்னன்**
**உச்சியின் முகத்திற் காலில் உரத்தினில் சிறைகள் தம்மில்**
**வச்சிர நெடுங்கண் வாளி வரம்பில தொடுத்து விட்டான். (7674)**

**பொருள்:-** அச்சூரபன்மனின் அச்செயலை முருகப்பெருமான் பார்த்து, அருந்தீயைப்போல் சிரித்துக் கையில் இருந்த வில்லை வளைத்துப் பொல்லாத செயலையுடைய சூரபன்மனின் உச்சியிலும் முகத்திலும் காலிலும் மார்பிலும் இறகுகளிலும் வயிரமான கொடிய அம்புகளை அளவற்றவையாகத் தொடுத்தார்.

இந்திரன் மயிலாக வடிவம் கொண்டு வந்து முருகப்பெருமான்பால் முன்னின்று, தமது மேல் ஏறி போர் புரிந்தருளுமாறு வேண்டிக்கொள்கிறான். முப்புரங்களை எரிப்பதற்குத் தேர் செய்தபோது, தாம் செய்யும் தேரினாலும் அம்பினாலுமே முப்புரங்களைச் சிவபெருமான் எரிக்கவுள்ளார் என்று தேவர் ஆணவம் கொண்டனர். எனவேதான், தேரினை உடையச்செய்து வெறும் புன்சிரிப்பாலேயே முப்புரங்களை எரித்தருளினார். அஃதுபோல், இந்திரன் மயில்வடிவம் தாங்கி வந்து முருகப் பெருமானைச் சுமந்து நிற்பதனாலேயே, முருகப்பெருமான் போர் வெற்றிகொண்டார் என்று இந்திரன் ஆணவம் கொண்டுவிடக்கூடாது என்பதற்கு, இந்திரனின் இயலாமையை முருகப் பெருமான் உணர்த்தியருளும்வகையில் சிம்புள்வடிவச் சூரபன்மனால் தாக்கப்பட அனுமதியளித்து, இந்திரமயில் வருந்தி நிற்கும்போது சிம்புள்வடிவச் சூரபன்மனை அம்புகள் தொடுத்து வீழ்த்தி இந்திரமயிலைக் காத்தருளினார். தேவர்களின் இழிவையும் முருகப்பெருமானின் உயர்வையும் கச்சியப்பசிவாசாரியப்பெருமான் கந்தபுராணத்தில் இறைவன் அறிவித்தாலே அறியும் உயிர்களின் சிற்றறிவுக்கும் முற்றுணர்வினனாகிய இறைவனின் பேரறிவுக்கும் தக்க விளக்கமாகக் காட்டியருளியிருக்கும்போது, அங்ஙனம் உணர்ந்து தெளிந்து நிற்பதே சைவசமயத்தார் கடனாகும்.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# The Potential of Tamil Diasporic Youth

On a Sydney stage in November, the Koothu, Ilangai Venthan Raavanan unfolded, but not merely as a performance, but as a reclamation. In a city thousands of kilometres away from the landscapes that shaped our epics and traditions, the story of our great Tamil King, Raavanan, was retold through a distinctly Tamil lens, one of sovereignty, intellect, valour, and cultural pride.

Koothu has always been an art form of truth. Rooted in traditional Tamil cultural art forms and performed for the people, Ilangai Venthan Raavanan did exactly that, moving beyond one-dimensional portrayals to reveal Raavanan as a powerful Tamil king and one of the greatest devotees of Lord Sivan.

For many young Tamils growing up outside the homeland, engagement with traditional arts is often limited by distance, time, or perception. Koothu, in particular, is sometimes dismissed as outdated or irrelevant. Yet, when youth step forward to learn and perform such forms, they transform them into acts of cultural agency. They show that tradition is not fragile; it is resilient when embraced with understanding and respect.

Performing Illangai Venthan Raavanan in Sydney was a declaration that Tamil identity does not weaken abroad. It strengthens. The show was able to show diasporic communities all over the world what the Tamil Youth of today can do with proper guidance.

This Koothu was performed by 10 youth Uni students, with little to no experience in the art form due to its limited exposure in Western countries. Yet through multiple rehearsals a week over a period of months, they were able to produce a spectacular traditional performance that even they didn't believe they could pull off. Not only did they surprise the audience, but they also surprised themselves.

That is perhaps the most important lesson of all.

Just like these performers, every member of the Tamil youth diaspora no matter where in the world they live, carries the same potential. And this is not limited to Koothu alone. It applies to all aspects of Tamil culture and tradition: language, music, philosophy, literature, and community leadership. The diaspora youth have both the responsibility and the opportunity to carry these legacies forward not as passive inheritance, but as active practice.

When young Tamils choose to engage with their culture, they do more than preserve it. They redefine it for the present and secure it for the future. As long as our youth continue to step onto the stage, literal or metaphorical, Tamil culture will remain not just remembered, but lived.

I had the honour of performing as Raavanan in this Koothu, and I congratulate all the dancers, the directors, musicians and the many others who supported this whole production.

# Saiva Saint Aanaya Nayanar - The reckless






Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

Aanaya Nayanar, the 13 of the Saintly 63, lived as a herdsman in the quiet expanses of Thiru-purambayam, where cattle-tending formed the structure of his community, being known for peace and knowledge. Though commonly the cowherds are classi cally associated with Krishna, Aanayar'is devotion to Siva did emerge from the simplicity of rural life, shaped by the discipline of daily labour and the clarity of inward remembrance of the special tribe who were Siva Devotees. The instrument through which he expressed this devotion was the flute he carried with him. Its sound became the means by which he articulated his unbroken orientation toward Siva.

Each morning, as he led the cattle to graze, he played the flute with a stillness of mind that allowed the notes to flow as a form of invocation. The melody was strategic, as it was a steady articulation of the sacred name, repeated with sincerity until his focus synchronised with the beats of nature. This practice was neither performed for an audience nor directed toward recognition. It was a private articulation of

devotion woven into the tasks of livelihood. His spiritual discipline grew from constancy rather than outward austerity.

On a day preserved in the tradition, his absorption in the sound of the flute produced a stillness that altered the usual order of the natural world. As he played, to paint a very hypothetical picture: as a tiger emerged from the forest edge and approached him and other wild beasts stepped closer,witnesses from across the hill expected violence. Aanayar remained unconscious of all of this. The sound of the flute continued constantly., triggering a trance where predator and prey mingled, with a hungry stomach and sharp claws still intact. What changed was the factor of violence and its source, which the cowherds understand so aptly.In that same scene, one can imagine other animals of the forest gather. Creatures ordinarily held apart by fear understood the peace in existence, wherever the sound vibrated, realising the subsidation of the natural enmity between hunter and prey.

The event is spoken of very uniquely as an anecdote in the nayanar's routine, rather than as challenge or test, as experienced popularly by the collective 63. His concentration had reached a purity in which the usual agitation of the world momentarily receded and no exemplary test was required. This also goes to show how much the lord is moved by music, to an extent where his very own routine goes astray when it comes to bhakthas with a musical gravitas.

**Rememberance**

Aanaya Nayanar did not interrupt his playing nor acknowledge the tension of the scene. His devotion was not conditioned by circumstance. It was the ground of his life. His example shows that spiritual attainment does not require withdrawal from the responsibilities of daily work. It requires the alignment of every action with inward remembrance. His tending of cattle, and the steady sound of the flute were not separate activities. They formed a single discipline unified through devotion. This triggered the divine couple to take form and bless the Nayanar with eternal grace, stripping away from the tricks and divine play.

In the Saivite tradition, Aanaya Nayanar is honoured as one who attained liberation while remaining rooted in the duties of everyday existence. His life stands as evidence that the deepest states of devotion arise through constancy, sincerity and presence. The peace that settled upon the animals was not the external power of God! It was but a reflection of the clarity he cultivated within himself. For this reason he is remembered as one of the nayanars who show more mundane relevance, and speak of the true spectrum of attaining the core yearning.

# வாதவூரடிகள் புராணத்தின் உரையாசிரியர் சிவத்திரு. ம.க.வேற்பிள்ளை


ம.க.வேற்பிள்ளை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓர் இணையற்ற உரை ஆசிரியர் சிவத்திரு.ம.க. வேற்பிள்ளை அவர்கள். இலங்கை யாழ்ப்பாணம் மட்டுவில், சிவத்திரு. கணபதிப் பிள்ளை அவர்களின் புதல்வனார் சிவத்திரு. வேற்பிள்ளை. அதனால் ம.க. வேற்பிள்ளை என்று மரியாதையுடனும் அன்புடனும் அழைக்கப் பட்டார்கள். அவர்கள் அபிராமி அந்தாதிக்கு உரை செய்தவர்கள். சிறந்த தமிழ் அறிஞர். திருவாசகத்திற்கு உரை எழுதிய திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சிவத்திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களுக்கு ஆசிரியராக விளங்கியவர்கள்.

**"ஈழமண்டல சதகம்"** என்ற நூலை அருளிச் செய்தவர்கள். சிவத்திரு.ம.க.வேற்பிள்ளை அவர்கள் திருவாதவூர் அடிகள் புராணத்திற்கு உரை செய்ததால், அவரைப் பற்றி அறிய விருப்பம் கொண்டு, அவரைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து தொகுத்து தந்துள்ளேன். இதற்கு, அண்மையிலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தமிழ்த்துறை, வாதவூர் அடிகள் புராணம், சிவத்திரு.ம.க. வேற்பிள்ளை அவர்கள் உரையுடன் வெளியிட்டது. அந்த நூலில் ஆசிரியர் தந்து இருந்த சிலக் குறிப்புகள், வேற்பிள்ளையே எழுதிய உரைப் பாயிரம், 1956 ல் **"உரையாசிரியர் சரித்திரம்"** என்ற வகையில் திருநெல்வேலி சைவ ஆச்சாரிய கலாசாலையின் பொறுப்பில் இருந்த சீர்வளர்சீர். கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய உரை, இவையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு இந்த வரலாற்றுச் செய்திகள் தரப்படுகின்றன.

பெரிய அளவில் செய்திகளைத் தந்து உதவியவர் சிவத்திரு. வேற்பிள்ளை அவர்களின் பேரனார் சிவத்திரு.பார்வதி சிவம் அவர்களின் புதல்வனார் சிவத்திரு. மகாலிங்கம் சிவம் அவர்கள். அடியேன் யாழ்ப்பாணம் சென்று இருந்த போது அவர்களை நேரில் சந்தித்தேன். அவர்கள் மூலம் வேற்பிள்ளை பற்றிய செய்திகளைச் சேகரிக்க முடிந்தது. இந்த செய்திகளை எல்லாம் தொகுத்து தர இருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் மட்டுவில் என்ற ஊர் பல சிறப்புகளைக் கொண்டது. முன் ஒரு காலத்திலே இமயமலையின் பின் தென் பகுதியிலுள்ள திருக்கேதாரம் என்கின்ற தலத்திலே மன்மதன் ஆகிய தேவிநாத் பூசிக்கப்பட்டமையால், தைவிகலிங்கம் எனப்பெரியதொரு மகாலிங்கம் பின்ஒரு நாளில் இவ்வூருக் கெழுந்தருளிச் சந்திரமௌலீசர் என்னும் திருநாமம் கொண்டு கோயில் கொண்டிருப்பது மட்டுவில்லுக்குள்ள சிறப்புகளுள் தலையாயதொரு தனிச்சிறப்பு ஆகும். தேவியின் திருநாமம் சாந்தநாயகி. இத்தகு நாமங்கள் உதித்த காலத்திலே இவ்வூருக்கு வழங்கிய மற்றொரு பெயர் சந்திரபுரம்.


பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

இந்த சந்திரமௌலீசர் மேலேதான் நம் நூலாசிரியர் **"ஈழமண்டல சதகம்"** என்ற நூலை அருளிச் செய்து உள்ளார். அவர்கள் பின்னர் மட்டுவில் நகரிலே ஓர் ஆரம்பப் பாடசாலை தொடங்கி உள்ளனர். அதற்கு சந்திரமௌலீசர் ஆரம்பப் பாடசாலை என்பதுதான் பெயர். இன்று அளவும் அப்பள்ளி இயங்கிக் கொண்டு இருப்பது சிறப்பு. அடியேன் யாழ்ப்பாணம் சென்று இருந்த பொழுது அந்தப்பள்ளியைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

சந்திரபுரம் ஆகிய மட்டுவிலில் சந்திரமௌலீச வித்தியாசாலை, சாந்தநாயகி வித்தியாசாலை என இரு சைவ வித்தியாசாலைகளும் வேறு பல சைவ வித்தியாசாலைகளும் உண்டு. சந்திரமௌலி வித்தியாசாலை பழைமையானது.

இங்கு உள்ளவர்களுக்கு குலதெய்வம் விநாயகக் கடவுள். விநாயகக் கடவுளுக்கு பல ஆலயங்கள் இருக்கின்றன. சுப்பிரமணியர் ஆலயங்களும் உண்டு. ஆலயங்களில் வருடந்தோறும் செந்தமிழ் வாக்காகிய கந்தபுராணம் படித்துப் பொருள் சொல்வது பன்னெடும் காலமாக இருப்பது மற்றொரு தனிச்சிறப்பு.

மட்டுவில், வடக்கு, தெற்கு என இருபிரிவுகள் உடையது. அப்பிரிவுகளில் மட்டுவில் வடக்கிலே, பரம்பரையான ஒரு சைவ வேளாண் குடும்பம் சிறப்புற்று விளங்கியது. இக் குடும்பத்தவர்களுக்கு யாழ்பாணத்து நல்லூரையடுத்த திருநெல்வேலியிலும், வடமராட்சியில் கல்விச் செல்வம் படைத்த புலோலியிலும் சுற்றத் தொடர்புகள் உண்டு.

புலோலியிலே மிக்க செல்வாக்கு உள்ளவராய் வாழ்த்தவர் வேலாயுதப் பிள்ளை என்பவர். அவருடைய புதல்வர் கணபதிப் பிள்ளை உடையார். இவர் மட்டுவில் வடக்கிலே மேற்குறிப்பிட்ட குடும்பத்திலே திருமணம் செய்து, அங்கே மிக மரியாதையுடன் வாழ்ந்து வந்தார். இவருக்கு இரு புதல்வர்கள். இருவரில் இளையவர் திருவாதவூர் அடிகள் புராணத்திற்கு உரை செய்த உரையாசிரியர் சிவத்திரு.ம.க. வேற்பிள்ளை. வேற்பிள்ளை உபாத்தியாயர் என்று வழங்குவதே பெரு வழக்கு. தென்மராட்சியில் உபாத்தியாயர் வீடு என்றால் அது வேற்பிள்ளை உபாத்தியாயர் வீடுதான்.

வேற்பிள்ளை உபாத்தியாயர் 1848-ஆம் ஆண்டு பிலவங்க வருடம் தைத் திங்கள் சனிக்கிழமை அன்று பிறந்தவர். இவர் தமது இளமைக் கல்வியைத் தமது தாய் வழியைச் சார்ந்தவராகிய சண்முகச் சட்டம்பியார் என்பவரிடம் பயின்றார். சட்டம்பியார் இவருடைய விவேகத்தையும், தமிழ் ஆர்வத்தையும் கண்டு மகிழ்ந்து, இவருக்கு இனி விசேடக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று இவருடைய தந்தையார்க்குத் தெரிவித்தார்.

அக்காலத்திலே நல்லூரிலே பாடம் சொல்லுதலிலே வல்லவராயிருந்தவர் கார்த்திகேய உபாத்தியாயர் என்பவர். அவரிடம் படிக்கவும், திருநெல்வேலியில் வசிக்கவும், ஒழுங்கு செய்து கொடுத்தார் கணபதிபிள்ளை உடையார்.

வேற்பிள்ளை உபாத்தியாயர் கார்த்திகேய உபாத்தியாயர் இடம்


வேற்பிள்ளை அவர்களின் பேரன்- புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்


புலவர் ம. பார்வதிநாதசிவம் மற்றும் அவரின் புதல்வர்கள்


சிவத்திரு. மகாலிங்கசிவம் மற்றும் அவர்கள் உறவினர்கள் (சிவசண்முகம் அவர்களுடன்)




உயர்ந்த இலக்கணம், இலக்கியங்களைக் கற்றுத் தேறினார். அதன் மேலும் படிக்கிற தாகம் அதிகரித்தது. மாணவரின் ஆர்வ நிலையைக் கண்ட ஆசிரியர் இரு பெருஞ் சுடர்களைச் சுட்டிக் காட்டி அவர்களிடம் தமது மாணவரை ஆற்றுப் படுத்தி வைத்தார்.

வேற்பிள்ளை உபாத்தியாயர் தமது ஆசிரியரின் அனுமதி பெற்று அந்த இருபெருஞ் சுடர்களையும் அணுகி, அச்சுடர்களைச் சரணடைந்தார். சுடர்களுள் ஒன்று செஞ்ஞாயிறு. அந்த ஞாயிறுதான் சீர்வளர்சேர் ஆறுமுக நாவலர் அவர்கள். மற்றைய சுடர் தண்ணியதான வெண்டிங்கள்.

அந்த குளிர்ந்த திங்கள்தான் நாவலர் அவர்களின் மருமகரும் மாணவருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலம் பிள்ளை. இருவரிடமும் அவரவர் செவ்வி நோக்கி அவரவரிடம் கற்றற்குரிய நூல்களைக் கற்று வந்தார் வேற்பிள்ளை உபாத்தியாயர். அப்பொழுது வேற்பிள்ளையுடன் கற்றவர்களுள் கோப்பாய் சபாபதி நாவலரும் ஒருவர்.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்துக்குச் சேனாவரையர் எழுதிய சேனாவரையம் என்கின்ற நுண்பொருள் உரையைச் சபாபதி நாவலர் அவர்களும் வேற்பிள்ளை உபாத்தியாயரும், வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளையிடம் எழுத்தெண்ணிப் படித்தவர்கள் என்று சொல்லுவார்கள். வித்துவ சிரோமணியவர்கள் சேனாவரையத்தை முன்னமே படித்து ஆயத்-தஞ் செய்து, நாவலர் அவர்களிடம் வினவித் தெளிந்து கொண்டே சபாபதி நாவலர் முதலியவர்களுக்குப் பாடஞ் சொல்லுவார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்.

இலக்கியபாடம் சொல்லுவதற்கு வித்துவ சிரோமணிக்கு ஆயத்தம் வேண்டுவதே இல்லை. கம்பராமாயணமென்றால் சிரோமணியின் திருவாயிலிருந்து கணம் தோறும் புதுப்புதுக் கருத்துக்கள் பிரவாகித்துக் கொண்டே இருக்கும். பொன்னம்பலம் பிள்ளையின் இலக்கிய இரசனை **"அறிந்தோறறியாமை கண்டத்து"** என்ற வள்ளுவர் வாக்குக்கு எடுத்துக் காட்டாய் வளர்ந்து கொண்டிருக்கும் என்பார்கள். வேற்பிள்ளை உபாத்தியாயர் பொன்னம்பல பிள்ளையை நிழல் போலத் தொடர்ந்து அவரைப் பிரியாமலும், நாவலர் ஆகிய அக்கினியை அணுகாமலும், அகலாமலும் இருவரிடமும் அன்போடும், அச்சத்தோடும் கல்வி பயின்று வந்தார்.

நாவலர் அவர்கள் சென்னையில் வசிக்கும் காலங்களில் உடன் சென்று அங்கிருந்து படித்ததும் உண்டு.

நாவலர் அவர்களிடம் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், இலக்கண நுண்மைகளையும், புராணங்கள், சைவாகமங்கள், இவற்றின் போக்குக்களையும், சைவாச்சாரங்களையும், கடவுட் பத்தியையும் வேற்பிள்ளை உபாத்தியாயர் நன்கு பயின்று கொண்டார். நாவலர் அவர்கள் இவை எல்லாம் நூலாகத் தந்து, பின் சைவ உலகம் இன்று அளவும் பயன்படுவதற்கு காரணமாக உள்ளவர்.

பொன்னம்பலம் பிள்ளையிடம் கம்பராமாயண இரசனையை எவ்வாறு எடுத்துச் சொல்லுவதென்ற இரகசியத்தை, அப்படியேக் கைப்பற்றிக் கொண்டார் என்றே சொல்ல வேண்டும். பொன்னபலம் பிள்ளைக்கு பிறகு உரை சொல்லுகிற வித்தை வேற்பிள்ளை உபாத்தியாயர் இடமே குடியிருந்தது. உரை சொல்லும் வித்தையைப் பொன்னம்பலம் பிள்ளையிடம் கைப்பற்றியது போலவே, வசனமெழுதும் வித்தையை நாவலர் அவர்களிடம் உபாத்தியாயர் பயின்று கொண்டார்.

ஒரு சிறு கடிதம் எழுதுவதானாலும், நாவலர் அவர்களின் வசனத்தைப் பின்பற்றியே எழுதுவார். உரை சொல்லும் பயிற்சியும் வசனம் எழுதும் ஆற்றலும், பெரும் முயற்சியின்றியே இவருக்கு இயல்பாகவே அமைந்துவிட்டன.

நாவலர் அவர்களிடம் இருந்து அவரைப் போலவே வசனம் எழுதும் ஆற்றலையும், பொன்னம்பலம் பிள்ளையிடம் இருந்து அவரைப் போலவே உரை சொல்லும் ஆற்றலையும் பெற்று, இருபெரும் தலைவர்களின் ஆசியாலே அவர்கள் இருவரும் இயைந்து வந்த உருவமாக வந்தவர் வேற்பிள்ளை அவர்கள்.

நாவலர் அவர்களிடம் சிறப்புற்று விளங்கிய உபந்நியாச ஆற்றலை வேற்பிள்ளை உபாத்தியாயர் பயின்று கொண்டார் என்பது சாலாது. உபாத்தியாயர் உபந்நியாசஞ் செய்வதுண்டு. அது, பாட்டுக்கு உரை சொல்வது போன்றதொரு நடையாயிருக்கும். உரை சொல்லுமாற்றல், உபந்நியாச ஆற்றலை விழுங்கி மேற்கொண்டு விட்டது போலும். உபாத்தியாயரிடம் மற்றொரு ஆற்றல் தனிச்சிறப்பு பெற்றியிருந்தது. அது கதை சொல்லுவதும், உரையாடல் செய்வதுமாகிய ஆற்றல். இலக்கண வழுவின்றியும், கடும் இலக்கணம் ஆகாமலும், உலக வழக்கு, உயர்ந்தோர் வழக்கு ஆகிய இரு வழக்குகளுக்கும் இயந்ததாயும், தெளிவும், சுவையும் நிரம்பியதாகவும் உபாத்தியாயரின் உரையாடல் இருக்கும்.

சொற்களை உரிய ஓசையில் உச்சரிப்பார். சொற்றொடர்கள், வசனங்கள் செழிப்புள்ள நிலத்தில் வளர்கின்ற பயிர் போல செழுமை சொட்டிக் கொண்டுயிருக்கும். சொற்பஞ்சம், பொருட்பஞ்சம் உபாத்தியாயரின் வாய் அறியாதவை. உபாத்தியாயர் கதை சொல்லுமாற்றல் தனி அழகு படைத்தது. அது அவர்பால்கலைத் தன்மை எய்தி அமைந்தது என்று தான் சொல்ல வேண்டும். மட்டுவில் வடக்கில் உபாத்தியாயரின் வீடு கிழக்கு பக்கத்தில், வடக்கு தெற்காக நீண்டதொரு வெளித் திண்ணையோடு கூடியது. அத் திண்ணையிலே, உபாத்தியாயர் சிவசின்னங்கள் மிளிரக் கிழக்கு முகமாக வீற்றிருப்பார். பிரபுக்களும், கல்விமான்களும், எப்பொழுதும் அவரைச் சூழ்ந்திருப்பார்கள். உபாத்தியாயரின் வாயிலிருந்து, சாத்திரக் கருத்துக்களைக் கொண்ட புராண இதிகாசக் கதைகள் பிரவாகித்து கொண்டிருக்கும்.


**வேற்பிள்ளை அவர்கள் வாழ்ந்த வீட்டின் எஞ்சிய பகுதி (இடம் - மட்டுவில்)**

அப்பொழுது உபாத்தியாயரின் தோற்றமும், கதாரசமும், சூழ்நிலையும், **"கேளுங்கள் நைமி சாரணிய வாசிகளே"** என்று கதை சொல்லுகின்ற சூதமகா முனிவரையே தான் ஞாபகம் செய்யும்.

இவ்வாறு அவர்கள் இருந்து பயிற்று வித்த அந்த வீடு இன்று இல்லை என்பது கவலைக்குரிய விடயம். அடியேன் அண்மையிலே மட்டுவில் சென்று சிவத்திரு. மகாலிங்கம் சிவம் அவர்களின் உதவியுடன், சிவத்திரு. வேற்பிள்ளை அவர்களின் உறவினர்களாக விளங்குகின்ற அவர்களைத் தொடர்பு கொண்டு அந்த இடத்தை கண்டுபிடித்துச் சென்றபோது, அங்கு ஒரு சிறிய சுவர், வீடு இருந்ததற்கு அடையாளமாக பெரிய காணி மட்டுமே இருக்கிறது. ஆனால் அவ்வாறு தமிழ் வளர்க்கப் பட்ட இடத்திலே இன்று ஒன்றும் இல்லாமல் இருப்பது பெரிய வருத்தத்தை அளித்தது.

ஆற்றல்கள் நிரம்பிய உபாத்தியாயர் ஆசிரியர்களிடம் படித்துத் தேறிய பிறகு, தமது ஆசிரியர்கள் போலவே தாமும் மாணவர்களுக்குப் பாடம் சொல்லத் தொடங்கினார். மட்டுவில் வடக்கில் உள்ள வித்தியாசாலை வேற்பிள்ளை உபாத்தியாயரால் நிறுவப்பட்டது. சந்திரமௌலீசர் வித்தியாசாலை என்ற பெயர் பின்பு வைக்கப்பட்டது. உபாத்தியாயரின் வீடும் ஒரு கலாசாலையாகவேயிருந்தது. தென் மராட்சியில் உள்ள பல ஊர்களிலுமிருந்து அநேக மாணவர்கள் வேற்பிள்ளை அவர்களி

டம் சென்று படித்தார்கள். வேற்பிள்ளை அவர்களைப் பின் பற்றுகின்ற மாணவர் பரம்பரை இன்றும் இருந்து வருகின்றது. நல்லூர், கீரிமலை போன்ற இடங்களில் இருந்து வேற்பிள்ளை உபாத்தியாயர் பாடம் சொன்னதும் உண்டு.

அக்காலத்தில் நாவலர் அவர்களின் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் விரும்பிவாறு, சிதம்பரத் துக்குப் போய், அவ்வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராய் வித்துவான் பரீட்சைக்கும் படிக்கின்ற மாணவர்களுக்குத் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கள், இலக்கியங்கள் கற்பித்துக் கொண்டு, சிதம்பர சபாநடேசரை நாள்தோறும் வணங்கிக் கொண்டு, சிவபூசை துரந்தரராய், தலயாத்திரை செய்து கொண்டிருந்தார் வேற்பிள்ளை உபாத்தியாயர். இங்ஙன மாக இருபத்தி மூன்று ஆண்டுகள் கழிந்தன. 1930ஆம் ஆண்டு தைத் திங்களில் தமது 82 வது வயதில், முத்தி தரும் தலமாகிய சிதம்பரத்திலே இறைவன் திருவடி நீழலை அடைந்தார். இத் துணையும் உபாத்தியாயர் பிறந்து கற்றதும் கற்பித்ததுமாகிய வரலாறு சுருக்கி உரைக்கப்பட்டது.

இனி அவர் செய்த நூல் உரைகள் வருமாறு,

1. வைரவ ஸ்தோத்திரமாலை
2. புலியூரன் அந்தாதியுரை
3. கெவுளி நூல் விளக்க உரை
4. திருவாதவூரடிகள் புராணப் பொழிப்புரை,
5. இதன் விருத்தியுரை
6. நாலாயிரப் பாடலாகிய வேதாரணிய புராண நூதனப் பதிப்பு திருத்தம்
7. இதன் குறிப்புரை
8. அபிராமி அந்தாதி உரை
9. ஆருயிர்க் கண்மணி மாலை
10. சந்திர மௌலீசர் சதகம் என்னும் ஈழமண்டல சதகம் என்பன உபாத்தியாயரால் இயற்றப்பட்டவைகள்.

இவற்றுள் சில நூல்கள் அவ்வப்போது பதிப்பு ஆகி உள்ளன. **"ஈழ மண்டல சதகம்"** என்ற நூல் யாழ்பாணப் பல்கலைக்கழகத் தின் தமிழ் பேராசிரியராக விளங்கிய சிவத்திரு. சிவராசா என்பவரின் முயற்சியால் அண்மையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை, உரை எழுதுவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள நூல். பரிமேலழ கர் உரை, நாவலர் உரை ஆகிய இருவர் உரைகளையும் பின் பற்றிச் சிவஞான சுவாமிகளின் பரந்த உரையைத் தொடர்ந்து விரிந்தது உபாத்தியாயரின் விருத்தியுரை. இதற்குப் பிறகு இது போன்றதொரு மரபுபட்ட விருத்தியுரை இன்று காறும் தோன்ற வில்லை என்றே சொல்லலாம். இவ்விருத்தியுரையை வித்து வசிரோமணி பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் வியந்து பாராட்டி, உபாத்தியாயருக்கு **"உரையாசிரியர்"** என்ற சிறப்புப் பெயரை வழங்கியிருக்கின்றார்கள்.

அண்மையிலே இந்த நூலைப் பயிலுகின்ற ஓர் வாய்ப்பும், அதன்மேல் ஏற்பட்ட ஓர் ஈர்ப்பும், இந்தியாவிலே, தமிழ்நாட் டில், திருப்பூரிலே கிட்டதட்ட 50 வாரங்கள், வாரம் இரண்டு மணி நேரம் என்கின்ற வகையிலே திருவாதவூர் அடிகள் புராணத்தை தொடர்ந்து சொற்பொழிவாக செய்யக்கூடிய வாய்ப்பும் அடி யேனுக்கு கிடைத்தது. அந்த உரையை முழுமையாக பயில்கின்ற வாய்ப்பும், அதனால் சிவத்திரு. வேற்பிள்ளை அவர்களின் மீது ஏற்பட்ட மிகப்பெரிய மரியாதையும் தான், மட்டுவில் சென்று அவர்கள் வாழ்ந்த இடங்களை எல்லாம் பார்க்க வேண் டும் என்றும், அவர்களுடைய உறவினர்கள், அவர்களுடைய மாணவர்கள், அவர்கள் வழி வந்தவர்களை எல்லாம் முடிந்த அளவிற்கு சந்தித்து, வேற்பிள்ளை அவர்களைப் பற்றியக் குறிப்பு களை எல்லாம் பெற வேண்டும் என்ற ஓர் பெரிய ஆர்வத்தை துண்டின.

அவர்களுடைய வாதவூர் அடிகள் புராணத்தை பயிலு கின்ற போது எல்லாம் சிவஞானசாமிகள் உடைய திறமும், பரிமேலழகர், நாவலர் போன்றவர்களின் உரை நுட்பங்களும் அப்படியே விளங்குவதைக் காண முடிகிறது.

சைவநெறி மரபில் இருந்து சற்றும் விலகாத விரிவான ஓர் உரை பல இடங்களிலே, கடவுண்மாமுனிவர் குறிப்பாகத் தந்த செய்திகளை எல்லாம் அதோடு தொடர்பு உடைய செய்திகளாக பலவற்றையும் விரித்துத் தருகின்ற சிவத்திரு. வேற்பிள்ளை அவர்களுடைய பங்கு சைவ உலகத்திற்கு மகத்தானது. மூவர் வரலாறுகளையும் சேக்கிழார் சுவாமிகளின் திருவாய் மூலமாக அறிகின்ற நாம், வாதவூர் அடிகளைப் பற்றிய செய்திகளை முழுமையாக பெறுவதற்கு ஒரே ஒரு நூலாக அமைந்திருப்பது இந்த திருவாதவூர் அடிகள் புராணம்.

திருப்பெருந்துறைப் புராணம், திருஉத்தரகோசமங்கைப் புராணம், திருவிளையாடல் புராணம் போன்ற நூல்களில் எல்லாம் இருந்து ஆங்காங்கே சில செய்திகள் கிடைத்தாலும் கூட முழுமையாக வாதவூர் அடிகள் புராணம் கடவுண்மா முனிவர் அவர்களால் நமக்கு தரப்பட்டது. 545 செய்யுட்கள் கொண்ட அந்த நூலுக்கு சிவத்திரு. வேற்பிள்ளை அவர்கள் செய்த மிகப் பெரிய ஒரு விருத்தியுரை, இன்று தமிழ் இலக்கிய உலகிற்கும், சைவ சித்தாந்த உலகிற்கும் பெரிய ஒரு அருட் கொடையாக உள்ளது.

வாதவூர் அடிகள் புராணம் போலவே மற்றும் ஒரு சிறப்பான நூல் ஈழ மண்டல சாதகம். இது தமக்குத் திருவருட்பேறும் பிறர்க்கு ஈழமண்டல விசேட விருத்தாந்தங்களை விளங்க வைத் தலுமே பயனாகத் தம் குலதெய்வமாகிய சந்திரமௌலீசரை, அவர் திருவருட் சத்தியாகிய சாந்த நாயகியம்மையாளோடு ஒருங்கவைத்து எதிர் முகஞ்செய்து இனிய செந்தமிழ்ச் செய்யுள் நடையில் இயற்றப்பட்டது.

உபாத்தியாயருக்கு ஐந்து புதல்வர்கள். **"கல்லாமற் பாதி குலவித்தை"** என்பதற்கு இலக்கியமானவர்கள் அவர்கள். மூன்றாவது புதல்வர் சிவத்திரு. மகாலிங்கசிவம் அவர்கள். அவருடைய மகனார் சிவத்திரு. பார்வதிநாத சிவம். அவருடைய மகனார் சிவத்திரு. மகாலிங்க சிவம். இவர்கள் இப்பொழுதும் இலங்கை யாழ்பாணத்தில் வசித்து வருகிறார்கள். கல்வித்து றையிலே இருந்து சிறந்தபணி ஆற்றி வருகிறார்கள் அவர்களை நான் சந்தித்தது மிகப் பெரிய பேறு. அவர்கள் மூலமாகதான் இந்த செய்திகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டேன்.

சிவத்திரு. வேற்பிள்ளை அவர்கள், திருவருட்பயன் நூலுக்கு உரை செய்த சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் ஐயா அவர்க ளின் தங்கை கணவர் இந்த நேரத்தில் அவர்களுக்கும் அவர்களு டைய மூதாதயர்கள் எல்லோருக்கும், சிவத்திரு. வேற்பிள்ளை அவர்களின் திருவடிக்கும் என் அன்பையும், வணக்கத்தையும் செய்து, வாதவூர் அடிகள் புராணத்தை முறையாக வெளியிட்ட பெரியவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைச் சார்ந்தவர்கள் எல்லோருக்கும் இந்நேரத்தில் என் அன்பையும், வணக்கத்தையும் பதிவு செய்கிறேன்.

முக்கியமான குறிப்பு திருவாசகம் மற்றும் திருமந்திரம் நூல் களுக்கு உரை எழுதிய திருவாவடுதுறை ஆதீன வித்வான் சிவத்திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வேற்பிள்ளை உபாத்தியாயர் இடம் நேரடியாக பாடம் கேட்ட செய்தியை மறவன்புலவு சிவத்திரு. சச்சிதானந்தம் ஐயா மூலமாக தெரிந்து கொண் டேன். சிவத்திரு. ச தண்டபாணி தேசிகர் அவர்களிடம் தான் தமிழக முன்னாள் முதல்வர் காலஞ்சென்ற சிவத்திரு. மு. கருணா நிதி அவர்கள் மாணவராக இருந்து பயின்றது வரலாற்று உண்மை.

இப்பேர்பட்ட பெரிய தமிழ் பாரம்பரியத்துக்கு எல்லாம் ஆசிரியராக விளங்கிய வேற்பிள்ளை உபாத்தியாயரின் நூல் களை, உரைகளைப் பயில்கின்ற வாய்ப்பு கிடைத்ததற்கு திரு வருளுக்கும், குருவருளுக்கும் நன்றி சொல்லி, இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

# தென்னாட்டு நிகழ்வுகள்



கார்த்திகைத் திங்கள் நிறைமதி வழிபாடும் தீபத்திருநாள் வழிபாடும் (04-12-2025)



மார்கழி அதிகாலை சிறப்புப் பூசை தொடக்கம் (16-12-2025)



சாவகச்சேரி (வாரிவனம்) ஆதி வாரிவனேசர் திருக்கோயில் சங்குநீராட்டு (29-12-2025)



ஆறுமுகநாவலர் குருபூசை
(10-12-2025)



# தென்னாட்டு நிகழ்வுகள்



ஐப்பசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (05-11-2025)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து ஐந்தாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 19ம் நாள் நிறைமதி அன்று (03-01-2026 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.. சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org